கொளத்தூர் மணி
Kolathur Mani

# ஈழ விடுதலையும் திராவிடர் இயக்கங்களும்



Eela Viduthalaiyum Dravida Iyakkamum

# ஈழ விடுதலையும்

# திராவிடர் இயக்கங்களும்

-

## கொளத்தூர் மணி

**@நிமிர்வோம்**

மனத்தின் அடியாழத்தில் எப்போதும் திராவிடர் இயக்க எதிர்ப்பைக் கொண்டிருந்த பலர், ஒட்டு மொத்த திராவிடர் இயக்கங்களையும் ஈழ விடுதலை எதிர்ப்பாளர்களாகவும், தமிழ் இனத்துக்கு எப்போதும் இரண்டகம் செய்பவர்களாகவும் நிறுவுவதற்குக் கிளம்பினர்.

போதிய அரசியல் புரிதல் இல்லாத, தமிழ்நாட்டு அரசியல் வரலாறு எதுவும் அறியாத புதிய இளையோர் கூட்டம், ஈழத்தின் கடைசி கட்டப் போர் நடந்த நேரத்தில் ஈழ ஆதரவு நிலைப்பாட்டுடன் தெருவுக்கு வந்திருந்தனர். அதுவும் இறுதிப்போர் தொடங்கும் நேரத்தில் ஈழத்திற்கு சென்ற (அனுப்பிவைக்கப்பட்ட) ஒருவர் பிரபாகரனை சில மணித்துளிகள் மட்டுமே சந்தித்து விட்டு வந்ததையே தனது அரசியல் வரலாறாகக் கொண்ட ’காளான்' தலைவர் போன்றோர், வரலாறுகளை வாட்சப்பில் மட்டுமே பயிலும் அப்பாவி இளையோரிடம், திராவிடர் இயக்க எதிர்ப்புப் பரப்புரைக்கு கலைஞர், தி.மு.க. செயல்பாடுகளைக் கொள்முதல் ஆக்கிக் கொண்டனர். அரசியல் தெளிவு கொண்ட தலைவர்களும், இயக்கங்களும் கூட தி.மு.க.வைக் காட்டியே திராவிடர் இயக்க எதிர்ப்புப் பரப்புரையை மேற்கொள்கின்றனர். முன்னொரு காலத்தில் ’விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இரவிக்குமார்' செய்ததைப் போலவே, சில அடிகளை உருவி எடுத்தும், பொருத்தமில்லா பொருள் விளக்கங்கள் கொடுத்தும் தமது அறிவுப் புலமையைக் காட்டப் புறப்பட்டுள்ளனர்.

எனவே, இந்த வேளையில் ஈழ விடுதலைப் போராட்டத்தில் திராவிடர் இயக்கத்தின், திராவிடக் கட்சிகளின் பங்களிப்பு என்ன என்பதை எடுத்துரைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

## உள்ளடக்கம்


முன்னுரை

உள்நுழையும் முன்

திமுக பங்கு

இந்தியாவில் பயிற்சி

பயிற்சிக்கான பொருளியல் தேவை

ஈழ ஆதரவு நடவடிக்களுக்கான அரசின் நெருக்கடி

இந்திய அமைதிப்படை அத்துமீறல்கள்

திராவிட தலைவர்களின் ஈழப் பயணம்

கைது படலங்கள்

இராஜீவ் கொலை

கைது விசாரணை சிறை

புதிய தமிழ்த்தேசியர்களுக்கு சவால்

# முன்னுரை

தமிழ்நாட்டில் ஏறத்தாழ எல்லோருடைய உணர்வுகளும் ஈழத்துக்கும், ஈழ விடுதலைக்கும் ஆதரவானவைகளாக உள்ளன. ஆனால் செயல்தளத்தில், ஈழ ஆதரவு செயல்பாடுகளில் அவ்வாறு கூறிவிட முடியாது.

மற்றொரு பக்கம், ஈழ ஆதரவு என்பதை, சொற்களால் பெரும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துபவர்களில் பெரும்பாலானோர் செயல்பாட்டுத் தளத்துக்கு வந்ததில்லை.

ஈழத்தில் 2009 மே திங்களில் நடந்து முடிந்த கடைசிக் கட்டப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், ஈழத்தின் அப்பாவித் தமிழ் மக்களை அழித்தொழித்தும் வெறியாட்டம் ஆடிய இலங்கை அரசுக்கு, இந்திய காங்கிரசு அரசு ஆயுதம், ஆளணி, உளவு, தொழில்நுட்ப உதவிகள் என முழுமையாய்த் துணை நின்றது. அவ்வரசின் கூட்டாளியாக இருந்த தி.மு.க. தன்னல நோக்கில் அமைதி காத்தும், தமிழ்நாட்டில் தன்னெழுச்சியாய் நடந்த ஈழ ஆதரவுப் போராட்டங்களைத் தந்திரமான பட்டினிப் போர், பகட்டுப் பேச்சுக்களாலும் - கூர்மழுங்கவும் செய்தது. உள்ளுக்குள் உறைந்து கிடந்த விடுதலைப் புலிகள் மீதான பகையுணர்வு அவ்வாறு வெளிப்பட்டது. அது அந்தக் கட்சியில் பெரும்பான்மையாக இருந்த ஈழவிடுதலை ஆதரவாளர்களையும், போர் எதிர்ப்பு, இன அழிப்புப் போராட்டங்களில் பங்கேற்க விடாமல் மறைமுகமாக தடுத்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின், குறிப்பாக கலைஞரின் இரண்டக நடவடிக்கை இன உணர்வாளர்கள் இடையில் பெரும் வெறுப்பை உருவாக்கியது. இவ்வெறுப்பு 2009இல் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியை வீழ்த்த, தேர்தலில் பங்கெடுக்கும் ஈழ ஆதரவாளர்கள் ஏறத்தாழ அனைவரையும் எதிரணியின் பக்கம் நிற்க வைத்தது.

ஆனால், மனத்தின் அடியாழத்தில் எப்போதும் திராவிடர் இயக்க எதிர்ப்பைக் கொண்டிருந்த பலர், தி.மு.க.வின் இந்த இரண்டகச் செயல்களைக் காட்டிக் காட்டி தமது திராவிடர் இயக்க எதிர்ப்புணர்வை வளர்த்தெடுக்கப் பயன்படுத்திக் கொண்டனர். ஒட்டு மொத்த திராவிடர் இயக்கங்களையும் ஈழ விடுதலை எதிர்ப்பாளர்களாகவும்,

தமிழ் இனத்துக்கு எப்போதும் இரண்டகம் செய்பவர்களாகவும் நிறுவுவதற்குக் கிளம்பினர்.

போதிய அரசியல் புரிதல் இல்லாத, தமிழ்நாட்டு அரசியல் வரலாறு எதுவும் அறியாத புதிய இளையோர் கூட்டம், ஈழத்தின் கடைசி கட்டப் போர் நடந்த நேரத்தில் ஈழ ஆதரவு நிலைப்பாட்டுடன் தெருவுக்கு வந்திருந்தனர். அதுவும் இறுதிப்போர் தொடங்கும் நேரத்தில் ஈழத்திற்கு சென்ற (அனுப்பிவைக்கப்பட்ட) ஒருவர் பிரபாகரனை சில மணித்துளிகள் மட்டுமே சந்தித்து விட்டு வந்ததையே தனது அரசியல் வரலாறாகக் கொண்ட ’காளான்' தலைவர் போன்றோர், வரலாறுகளை வாட்சப்பில் மட்டுமே பயிலும் அப்பாவி இளையோரிடம், திராவிடர் இயக்க எதிர்ப்புப் பரப்புரைக்கு கலைஞர், தி.மு.க. செயல்பாடுகளைக் கொள்முதல் ஆக்கிக் கொண்டனர். அரசியல் தெளிவு கொண்ட தலைவர்களும், இயக்கங்களும் கூட தி.மு.க.வைக் காட்டியே திராவிடர் இயக்க எதிர்ப்புப் பரப்புரையை மேற்கொள்கின்றனர். முன்னொரு காலத்தில் ’விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இரவிக்குமார்' செய்ததைப் போலவே, சில அடிகளை உருவி எடுத்தும், பொருத்தமில்லா பொருள் விளக்கங்கள் கொடுத்தும் தமது அறிவுப் புலமையைக் காட்டப் புறப்பட்டுள்ளனர்.

எனவே, இந்த வேளையில் ஈழ விடுதலைப் போராட்டத்தில் திராவிடர் இயக்கத்தின், திராவிடக் கட்சிகளின் பங்களிப்பு என்ன என்பதை எடுத்துரைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

# உள்நுழையும் முன்

தமிழ்நாட்டில் இருந்து பிழைப்பு தேடி, இலங்கை மலையக இரப்பர் தோட்டங்களுக்கு வேலைக்குப் போய், கொத்தடிமைகளாய் உழன்று வந்தனர், 'இந்திய வம்சாவழித் தமிழர்கள்'. அம்மலையகத் தமிழர்களின் வாக்கு உரிமை பறிப்பு, குடியுரிமை நீக்கம் 1940களின் இறுதியில் நிகழ்ந்தது. அப்போது அம்மக்களுக்கு ஆதரவான குரல்கள் தமிழ்நாட்டில் எழுந்தன. அம் மக்களின் நிலை குறித்து விரிவான கட்டுரைகளும் செய்தித் தாள்களின் முதன்மைச் செய்திகளும் நூல்களும் வெளிவந்தன. அரசியல் அமைப்புகள் மாநாட்டுத் தீர்மானங்களாகவும், செயற்குழு தீர்மானங்களாகவும் அம் மக்களுக்கான ஆதரவைத் தெரிவித்தன. தமிழக, இந்திய ஒன்றிய அரசுகளை அம்மக்களுக்கு ஆதரவாக செயலாற்றத் தூண்டின. அவற்றை செய்தவை திராவிடர் கழகமும், அப்போது புதிதாய் தோன்றியிருந்த திராவிடர் முன்னேற்றக் கழகமுமே ஆகும்.

ஈழக் கோரிக்கையை ஆதரித்து அதைத் தொடர்ந்து 1970களின் பிற்பகுதியில் எழுந்த தனித்தமிழ் ஈழக் கோரிக்கையை ஆதரித்து குரல் கொடுத்தவையும் இவ்விரு கழகங்களேயாகும்.

ஈழத்தமிழர்களின் அறவழிப் போராட்டங்கள் எல்லாம் அரசுப் படைகளால் அடித்துத் துவைத்து அடக்க முற்பட்டதே இளைஞர்களைக் கருவி ஏந்திப் போராட உந்தியது.

1980களின் தொடக்கத்தில் விடுதலைப் போராளிகள் தமிழ்நாடு வந்த நிலையில் அவர்களுடனான முதல் தொடர்பைக் கொண்டவர் அய்யா பழ. நெடுமாறன் அவர்களே ஆவார். தர்மபுரி நச்சலைட் பகுதிகளில் பயணம் - சட்டமன்ற உரை - காவல்துறை வெறியாட்டக் கண்டனம் போன்ற மானுட உரிமை களப் பணிகளும், மாந்தநேயத்துடன் பல சிக்கல்களில் தாமாக முன்வந்து முகம் கொடுக்கும் துணிச்சலும் அவர்பால் போராளிகளை ஈர்க்கச் செய்திருக்கலாம்.

அவரது ஈழப் பயணங்கள், அவை குறித்த அவரது எழுத்துக்கள் ஈழவிடுதலையின் நியாயங்களை உலகுக்கு உணர்த்தவும், அவரது முந்தைய இந்திய ஒன்றிய அளவிலான அரசியல் தொடர்புகள் ஈழ ஆதரவு தளத்தில் முன்னகரவும் பெரிதும் பயன்பட்டன.

அடுத்ததாக, புலிகள் தொடர்பு கொண்ட அரசியல் தலைவர் அன்றைய தி.மு.கவின் இந்திய நாடாளுமன்ற உறுப்பினராய் இருந்த வைகோ அவர்களே ஆவார். புலிகளை அழைத்து கலைஞரிடம் அறிமுகப்படுத்தியது தொடங்கி இன்றளவும் தொடர்கிறது. அவர் தி.மு.கவில் இருந்து விலகி (விலக்கப்பட்டு?) தனி அமைப்பாக உருவாக்கிய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், ஈழ விடுதலையையே தனது முழு முதற் கொள்கையாகக் கொண்டு இது தொய்வுமின்றி துடிப்புடன் செயல்படும் கட்சியாக விளங்குகிறது. இவரும் தனது ஈழப் பயணம், எழுத்து, உரை, இந்திய அளவிலான தலைவர்கள் தொடர்புகள் வழியாக ஈழவிடுதலை குறித்த புரிதலை தமிழ்நாட்டைத் தாண்டியும் பலவகைகளில், பல காலக் கட்டங்களில் எடுத்துச் சென்ற தலைவர் ஆவார்.

2009இல் புலிகளின் படைபலம் சிதைக்கப் பட்டதன் பின்னர், மேலைநாடுகளில் ஈழத் தமிழர்களின் துயரங்களை, இனக்கொலையை, தீர்வை, தேவையை - அமெரிக்கக் குடியரசுத் தலைவர், இங்கிலாந்து தலைமையமைச்சர், பல்வேறு நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் நல்லுறவைப் பேணி, அதன் வழியே அவற்றை விளங்கச் செய்ததில் பெரும்பங்கு அவர்க்கே உண்டு.

மேலும் பிரசெல்சில் நடந்த அய்ரோப்பிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூடியிருந்த அவையில் ஈழத் தரப்பு கோரிக்கைகளை முன்வைக்க, புலிகள் இயக்கம் தேர்ந்தெடுத்து அழைத்தது அவரைத்தான். ஒதுக்கப்பட்ட நேரம் கடந்தும் அவைத்தலைவர் மேலும் பேச இசைவு தந்தமை, இறுதிப் போருக்குப் பின்னரான அரசியல் நகர்வுகளில் பெரும் தாக்கத்தை விளைவித்த ஒன்றாகும்.

ஈழ விடுதலையோடு இணைத்துப் பேசப்படும் இராசீவ் வழக்கில் மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட மூவரின் தண்டனைக் குறைப்புக்கான வழக்குக்காக அவர் எடுத்த முயற்சிகள், அவரது கட்சி ஏற்பாடு செய்த பொதுக்கூட்டங்கள், மேற்கொண்ட தில்லி உச்சநீதிமன்ற பயணங்கள் பற்றி அனைவரும் அறிவர், ஆனால் அவ்வழக்கு நடத்த அவர் செலவளித்த பல பத்து இலக்கங்களைப் பற்றி என்னைப் போன்ற ஒரு சிலரே அறிவோம்.

மேலும் 2009 நாடாளுமன்றத் தேர்தலின் வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்ட நாள் 16.5.2009 ஆகும். ஏறத்தாழ முள்ளிவாய்க்காலில் போர் முடியும் நேரம் அது. அன்று சில பதற்றமான செய்திகளைப் பரிமாற புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் நடேசன், பலமுறை முயன்றும் தொடர்பு கொள்ளமுடியவில்லை. எனவே என்னைத் தொடர்பு கொண்டு வைகோ அவர்களிடம் உடனடியாகப் பேசவேண்டும் என்றனர். நானும் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் அவரது உதவியாளர் தோழர் அருணகிரியைத் தொடர்பு கொண்டபோதுதான், தொகுதியில் பதிவான வாக்குகளைவிட 23,000 வாக்குச் சீட்டுகள் அதிகம் இருப்பது குறித்து அவர் மாவட்ட ஆட்சியருடன் பேசிக் கொண்டிருப்பதாகக் கூறினார். நான் அவசரத்தைக் கூறியதும் சில மணித்துளிகளில் வைகோ அவர்கள் எனது தொடர்புக்கு வந்தார். நானும் எனக்கு அனுப்பப்பட்டிருந்த மின்னஞ்சல்களை உடனடியாக அனுப்பி வைத்தேன். அதுகுறித்து அமெரிக்க செனட்டர்கள் சிலரிடமும் (குடியரசுத் தலைவரைத் தொடர்பு கொள்ள முடியாததால்) இங்கிலாந்து தலைமையமைச்சர், வெளியுறவுத்துறை அமைச்சர் இருவரிடமும் பேசி உரையாடல் செய்திகளை மீண்டும் கூற ஏறத்தாழ 50 மணித்துளிகள் ஆயின.

அவரது தொகுதியில் பதிவானதைவிட வாக்குச் சீட்டுப் பெட்டிகளில் ஏறத்தாழ 23,000 வாக்குச் சீட்டுகள் அதிகமாக இருந்ததே அவர் மாவட்ட ஆட்சியருடன் சொற்போர் கொண்டிருந்த வேளையில் செய்தியாகும். அந்த மிகை சீட்டுகளே அவரது தோல்விக்குக் காரணமாயின. தன் அரசியல் வாழ்வைத் தீர்மானிக்கும் ஒன்றைக்கூட, புலிகள் என்றவுடன் விட்டுவிட்டு ஓடிவரும் செயல் ஒத்த வேறு நிகழ்வொன்றை யாராவது கேள்விப் பட்டிருப்போமா?

மற்றொரு திராவிடர் இயக்கத் தலைவர் புலவர் புலமைப்பித்தன். தமிழ்நாடு சட்ட மேலவைத் தலைவர், அரசவைப் புலவர், பெரியாரியலர். முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்மீது கொண்டிருந்த அளவு கடந்த அன்பையும், பற்றையும் புலிகளுக்காக பயன்படுத்திக் கொண்டவர். பொருளியல் பற்றாக்குறையில் தத்தளித்துக் கொண்டிருந்த புலிகளுக்கு எம்.ஜி.ஆர். முதன் முதலில் கொடுத்த இரண்டு கோடி ரூபாய்களும், தொடர்ந்து அளித்த பெருந்தொகைகளும் பாய்ச்சல் வேகத்தில் புலிகள் இயக்கம் செயல்பட உதவின. தனது

பதவி குறித்து சிறிதும் கவலை கொள்ளாமல், சில திரைமறைவு உதவிகளின் வழியாகப் புலிகளின் ஆயுத வலிமை உயர உதவியவர்.

இராஜீவ் என்ற கத்துக்குட்டி பிரதமரை, பழம் கிழ நரியான செயவர்த்தனே எளிதில் ஏமாற்றி நிறைவேற்றியதே 1987 ஒப்பந்தம். புலிகளை ஆயுதங்களை ஒப்படைக்குமாறு நெருக்கடி தந்த ஒப்பந்தம். ஈழ விடுதலைப் போரை அமைதிப் படையை அனுப்பி பத்தாண்டுகள் பின்தள்ளிய ஒப்பந்தம். உடல் நலம் கெட்டு அமெரிக்காவுக்கு மருத்துவத்திற்காய் செல்லவிருந்த எம்.ஜி.ஆரை சென்னை கடற்கரையில் தன்னோடு ஒரே மேடையில் நிற்கவைத்து ஆதரித்து பேசவைத்தார் இராஜீவ்காந்தி. அடுத்தநாள், பதற்றமாய், திராவிடர் கழகப் பொதுச் செயலாளரை அழைக்க, (அரசியலில் முரண்பட்டு நின்ற நிலையில் இருந்த) அவரோ தான் தனித்து வரமுடியாது, மற்றொருவரை அழைத்து வருவேன் என நிர்ப்பந்தித்து, நெடுமாறன் அவர்களை உடன் அழைத்துச் சென்றார் - காரணம் விளங்காமலே. "நான் மருத்துவத்திற்கு வெளிநாடு செல்கிறேன், உயிரோடு திரும்புவேனா என்பது தெரியாது. நேற்று நான் கடற்கரை மேடையில் இராஜீவோடு நின்றதால் நான் ஒப்பந்தத்துக்கு ஆதரவானவன் என்று தம்பி (தலைவர் பிரபாகரனை அப்போதெல்லாம் அவ்வாறு குறிப்பிடுவதே வழக்கம்) என்னைத் தவறாகக் கருதி விடக் கூடாது. நான் திரும்பி வராவிடில் நீங்கள் இருவரும் தம்பிக்கு இதைக் கூறிவிடுங்கள்” என்று கூறியப் பெருமகன் அவர்.

ஈழத்தில் தமிழர்கள் 1961 இல் தாக்கப்பட்ட போது தமிழினமும், தமிழ் மொழியும் பூண்டோடு அழிக்கப்படுவதில் இருந்து காப்பாற்ற - உண்மை நிலை அறிய ஒரு குழுவை அனுப்ப பன்னாட்டு மன்றம் (ஐ.நா) உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துக் கடிதம் எழுதினார் அண்ணா .

அதைப்பின்பற்றி, 1983 அக்தோபரில் தொடங்கி 84 நாட்கள் நடைபெற்ற பன்னாட்டு நாடுகள் அவைக்கூட்டத்தில் 70 நாட்கள் அன்றைய அ.தி.மு.க அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் கலந்து கொண்டு பன்னாட்டு மன்றப் பொதுச் செயலாளர் பெரஸ்.டி. கொய்லர் உள்ளிட்ட பல்வேறு நாட்டுத் தலைவர்களுக்கு எடுத்து விளக்கம் கொடுக்கச் செய்தார் எம்.ஜீ.ஆர்.

## திமுக பங்கு

தி.மு.கவின் பங்கும் குறைந்ததல்ல. 22.9.1981 அன்று நடைபெற்ற ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான இலங்கைத் தூதரக முற்றுகைப் போரில் ஏராளமானோர் சிறைப்பட்டனர். திராவிடர் கழகம் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் ஒருங்கிணைத்து, சிறைப்படுத்தப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு மிகப்பெரிய பொதுக் கூட்டத்தினை சில நாட்களில் நடத்தியது.

ஈழப் போராளித் தலைவர்கள் குட்டிமணி, செகன், தங்கதுரை ஆகியோர் சிங்கள அரசால் தூக்கிலிடப்பட்டதைக் கண்டித்து, 28.8.1982ஆம் நாளை ஈழத்தமிழர் பாதுகாப்பு நாளாக அறிவித்து, அனைவரையும் கருப்புப் பட்டை அணிய வலியுறுத்தியதோடு தமிழ்நாடு முழுதும் கண்டனக் கூட்டங்களை தி.மு.க நடத்தியது. திராவிடர் கழகத்தினரும் இணைந்து அக்கூட்டங்களை நடத்தினர்.

பாண்டியனார் சந்தை (பசார்) வழக்கு போன்ற அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெறுமாறும், இலங்கை அரசு கேட்டிருந்தவாறு போராளித் தலைவர்களை இலங்கை அரசிடம் ஒப்படைக்கக் கூடாது போன்ற முடிவுகள் திராவிடர் கழகத்தால் 18.6.83 அன்று கூட்டப்பட்ட அனைத்துக் கட்சி கூட்டத்தில் முடி வெடுக்கப்பட்டு, 2.7.1983 இல் கருணாநிதி, கி. வீரமணி, பழ. நெடுமாறன், அப்துல் லத்தீப், பெருஞ்சித்திரனார் ஆகியோர் கலந்து கொண்ட மிகப்பெரிய கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது. 1983 சூலை திங்கள் நடந்தேறிய தமிழினப் படுகொலைக்குப் பின்னர் கொஞ்சம் அடங்கியிருந்த தாக்குதல்கள் 1985இல் மீண்டும் வலுப்பெறத் தொடங்கியது. ஈழத் தமிழ் மக்கள் பெருமளவில் கொல்லப்படுவதும், ஏதிலியராய் தமிழகத்துக்கு வருவதும் அதிகரிக்கத் தொடங்கின. அந் நிலையில்தான் 1985 மே 13ஆம் நாளில் தமிழீழ ஆதரவாளர் அமைப்பு (**Tamil Eelam Supporters Organization**) 'டெசோ' தொடங்கப்பட்டது.

கலைஞர் தலைவராகவும், க. அன்பழகன், கி.வீரமணி, பழ. நெடுமாறன், அய்யண்ணன் அம்பலம் ஆகியோரும் உறுப்பினர்களாக இருந்தனர். தமிழீழ கோரிக்கையை வலியுறுத்தித் தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஈழம் என்ற சொல் சென்று

சேர்த்ததில் டெசோவின் பங்களிப்பு மிக அதிகம். கலைஞர், அன்பழகன், வீரமணி, வைகோ, நெடுமாறன் ஆகியோர் தொடர் பரப்புரையில் ஈடுபட்டனர்.

இந்த நேரத்தில்தான் இலங்கை அரசுக்கும் போராளிகளுக்கும் இடையே பூடான் தலைநகர் திம்புவில் பேச்சு நடந்தது. அங்கு பேச்சு நடந்து கொண்டிருக்கும் அதே நேரத்தில் இலங்கைப் படையின் தாக்குதலில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்ட செய்தி வரவும் பேச்சு முறிந்தது. அதனால் சினமுற்ற இராஜீவ் அரசு சென்னையில் தங்கியிருந்த போராளிகள் தரப்பின் முன்னணித் தலைவர்களான ஆண்டன் பாலசிங்கம், சத்தியேந்திரா ஆகியரோடு சந்திரகாசனையும் நாடு கடத்த ஆணையிட்டது. நாடு கடத்தலுக்கு எதிராகப் போராட்டத்தில் இறங்கியது டெசோ. 25.8.1985இல் இலட்சக் கணக்கானோர் கலந்து கொண்ட மாபெரும் பேரணி நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக 30.8.1985இல் தமிழ்நாடு முழுதும் தொடர்வண்டி நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. பணிந்துபோன இராஜீவ் அரசு நாடு கடத்தல் ஆணையை விலக்கிக் கொண்டது. தொடர்ந்தும் எழுச்சிமிக்கப் பேரணிகள் மாவட்டங்கள் தோறும் நடைபெற்றன என்ற போதிலும் 1986 பிப்ரவரி, மார்ச் திங்களில் ஈழத்தமிழர்கள் மீதான வன்முறை அதிகரித்த வண்ணமே இருந்தது. அதையொட்டி டெசோ தமிழகம் தாண்டியும் ஈழச் சிக்கலை இந்திய ஒன்றியம் எங்கும் எடுத்துச் செல்ல முடிவெடுத்தது.

அதன் அடிப்படையில் 1986 மே நான்காம் நாளில் மதுரையில் மாபெரும் மாநாடு ஒன்றினை டெசோ கூட்டியது. அம்மாநாட்டில் அடல் பிகாரி வாஜ்பாய், என்.டி. இராமாராவ், எல்.என். பகுகுணா, உபேந்திரா, ஜஸ்வந்த்சிங், அசாம் கணபரிஷத் தினேஷ் கோஸ்வாமி, பல்வந்த் சிங் இராமுவாலியா (அகாலிதளம்) அப்துல்ரசித் நாடாளுமன்ற உறுப்பினர் (காசுமீர் தேசிய மாநாட்டுக் கட்சி) பி. உன்னி கிருட்டிணன் நாடாளுமன்ற உறுப்பினர் (காங்கிரசு - எசு) போன்றோர் கலந்து கொண்டனர். இம்மாநாடு இந்திய ஒன்றிய பரப்பு முழுவதும் ஈழச் செய்திகளை எடுத்துச் செல்ல ஒரு பெரும் வாய்ப்பாய் அமைந்தது. 1982ஆம் ஆண்டு, சென்னை , பாண்டியன் சந்தையில் (ஊ.பு.அ. சவுந்திரபாண்டியன் வணிகத் தெரு) புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை, (ப்ளாட்) தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு தலைவர் உமா மகேசுவரன் (முகுந்தன்) கைத்து முக்கியால் சுட , பிரபாகரனும் திருப்பிச்சுட ஒரு துப்பாக்கிச் சண்டை நடந்தது.

அவ்வழக்கில் நால்வர் சிறைப்படுத்தப் பட்டனர். அவர்கள் நால்வரையும் இலங்கைக்கு அனுப்புமாறு இலங்கை அரசு கேட்டது. பிரபாகரன் உள்ளிட்டோர் மீது பதியப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறக் கோரியும், அவர்களை எக்காரணம் கொண்டும் இலங்கைக்கு அனுப்பக் கூடாது என்பதை வலியுறுத்தியும் திராவிடர் கழகம் போராட்டங்களை நடத்தியது.

அப்போது புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவராக தமிழ்நாட்டில் பணியாற்றிவந்த புலிகளின் மூத்த உறுப்பினர் பேபி சுப்பிரமணியன் (பின்னர் இளங்குமரன்) அவர்களின் தொடர்பு கிடைத்தது.

அதன் காரணமாக சென்னை பெரியார் திடலில் 9.7.1983இல் நடைபெற்ற திராவிடர் கழக இளைஞரணி மாநாட்டில்தான் திராவிடர் கழகத்தின் அன்றைய இளைஞரணி செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் முன்முயற்சியில் ஈழத்தமிழர் கண்(ணீர்) காட்சி என்ற ஈழவிடுதலை வரலாற்றை, ஈழத்தமிழர் படும் அல்லல்களை, அரச வன்முறையை விளக்கும் கண்காட்சி நடைபெற்றது.

அம்மாநாட்டின் முதன்மைப் பேசுப்பொருளே ஈழ விடுதலையாக இருந்தது. அதன் தொடர்ச்சியாக 24.7.1983 முதல் 45 நாட்கள், இன்றைய கோவை நகரப் பேருந்து நிலையம் அருகில், தற்போது இராசாசி சிலை உள்ள இடத்தில், தோழர்கள் கோவை கு.இராமகிருட்டிணன், வெ.ஆறுச்சாமி ஆகியோரின் ஏற்பாட்டில் கண்காட்சி நடந்தது. அக்கண்காட்சியில் தான் 15.7.1983இல் சுற்றி வளைப்பில் வீரச்சாவு அடைந்த உயிரிழந்த ஆசீர் சீலனின் புகைப்படமும், 23.7.1983இல் 13 படை வீரர்களையும், படை வண்டியை அழித்தொழித்த மோதலில் வீரச் சாவடைந்த செல்லக்கிளியின் படமும் இடம் பெற்றன. தொடர்ந்து தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், நகரங்களிலும் இக்கண்காட்சி திராவிடர் கழக இளைஞரணியால் நடத்தப்பட்டது.

ஒரே நேரத்தில் மூன்று, நான்கு இடங்களில் கண்காட்சிகள் நடக்கவும், அமைக்கவும் வாய்ப்பாக கண்காட்சியின் அனைத்து புகைப்படங்கள், தரவல்கள், வரைபடங்கள், ஓவியங்கள் அனைத்தையும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி ஏழு படிகள் எடுத்துக் கொடுத்து உதவினார். அக்கண்காட்சியைக் கண்ணுறும் பொதுமக்கள் அங்கு வைக்கப்பட்டிருக்கும் உண்டியல்களில் இடும் நன்கொடைகள்

தான் தொடக்ககாலப் புலிகள் இயக்கச் செயல்பாடுகளுக்கு முதன்மை வருமானம் ஆகும்.

23.11.1983இல் புது தில்லிக்கு வந்த இலங்கை அதிபர் ஜே.ஆர். செயவர்த்தனேயை எதிர்த்து தமிழகத்திலிருந்து திராவிடர் கழகத் தோழர்கள் 120 பேர் புதுதில்லி சென்று கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

1983ஆம் ஆண்டின் இறுதியில், திசம்பர் 17,18 ஆகிய நாட்களில், ”ஈழ விடுதலை மாநாடு" திராவிடர் கழகத்தால் மதுரையில் நடத்தப்பட்டது. அம்மாநாட்டில் அமிர்தலிங்கம், காசி ஆனந்தன், வண. சின்னராசா ஆகியோரும், அரசியல் கட்சிகளில் இருந்து, வைகோ, நெடுமாறன், இராசா முகமது (அ.தி.மு.க அமைச்சர்) ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அம் மாநாட்டின் தொடக்கத்தில் நடை பெற்ற ஈழவிடுதலைப் பேரணியின் இறுதியில், மாநாட்டின் முன்புறம், அமைக்கப்பட்டிருந்த மிக உயர்ந்த கம்பத்தில் ஈழக்கொடியை விடுதலைப் புலிகள் இயக்கத் தோழர் குமரிநாடன் உயர்த்தி வைத்தார்.

மாநாட்டுக்கு முன்னதாக திராவிடர் கழகத் தோழர்கள் தமிழகத்தின் ஏழு முனைகளில் இருந்து இருபது, இருபது தோழர்களைக் கொண்ட வழிநடை பரப்புரை அணிகள் திசம்பர் 9ஆம் நாள் தொடங்கி தமிழர்நாடெங்கும் ஈழ விடுதலைப் பரப்புரை செய்து கொண்டு திசம்பர் 16ஆம் நாள் மதுரையை அடைந்தது.

# இந்தியாவில் பயிற்சி

இதற்கிடையில் இந்திரா அரசு இலங்கையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அரசு செயல்திட்ட முன்னெடுப்பாக விடுதலைப் புலிகளைத் தவிர மற்ற எல்லா போராளிக் குழுக்களுக்கும் படைப் பயிற்சியளித்தது. இந்திய ஒன்றிய அரசு வலியுறுத்துவதைப் போல சந்திரகாசனை அரசியல் பிரிவுத் தலைவராக ஏற்க புலிகள் மறுத்ததால், விடுதலைப் புலிகளுக்கு மட்டும் பயிற்சி அளிக்கப்படவில்லை. அதன் பின்னர் புலிகள் முன்வைத்து வேறு சில நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டு புலிகளுக்கு வட இந்திய தளம் ஒன்றில் 150 பேருக்கு படைப் பயிற்சி வழங்கப்பட்டது.

அப்பயிற்சியை முடித்த புலிகள் 1983 அக்தோபரில் தமிழ்நாட்டுக்கு வந்தனர். அந்த நூற்று அய்ம்பதின்மரையும் இன்றைய தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் தோட்டத்தில்தான் தங்க வைக்கப்பட்டனர். அப்படித் தங்கியிருந்தவர்களில் ஒருவரான குமரி நாடன் தான் மதுரையில் திராவிடர் கழகம் நடத்திய ஈழவிடுதலை மாநாட்டில் தமிழீழக் கொடியை ஏற்றி வைத்தார். ஆக, 1983 அக்தோபர் முதல் 1984 சனவரி முடிய 150 தோழர்களையும் முழுமையாக தன் பொறுப்பில் பராமரித்தவர் தோழர் கு. இரா அவர்களே ஆவார்.

இதற்கிடையில், புலிகள் தாங்களே படைப்பயிற்சி அளித்து, போராளிகளை உருவாக்கும் நோக்கில் பயிற்சிக் கூடாரங்களை அமைக்க இடம் தேடத் தொடங்கினர். புலிகள் இயக்கத்தில் மூத்த தோழரும், சென்னை பாண்டியனார் சந்தையில் துமுக்கிச் சூட்டு வழக்கில் தலைவர் பிரபாகரனோடு சிறையானவருமான இராகவன், கோபி ஆகியோர் தோழர் கோவை இராமகிருட்டிணன் வழியாக என்னைத் தொடர்பு கொண்டனர். நானும் எங்கள் பகுதியில் இருந்த ஒதுக்குப்புறமாக உள்ள பல இடங்களைக் காட்டினேன். நான் வாழ்ந்துவந்த சொந்த ஊரில் காவேரி ஆற்றை ஒட்டி உள்ள எங்களது ஒரு நிலத்தையும், கழகத் தோழர் அர்த்தனாரி (மாணவரணித் தோழர் இலக்கம்பட்டி குமாரின் தந்தை) யின் மலைகளை ஒட்டி இருந்த நிலத்தையும் அழைத்துச் சென்று காட்டினேன்.

இறுதியில், மலையடிவாரத்தில், காடுகளை ஒட்டி இருந்ததும், எனது வீட்டிலிருந்து 10கல் தொலைவில் உள்ளதுமான எங்கள் நிலத்தைக் காட்டினேன். இறுதியில் கும்பாரப்பட்டி (இப்போது புலியூர் ) என்ற ஊரில் இருந்த எங்கள் நிலமே அவர்களுக்குப் பொருத்தமாகப்பட்டது. காடுகளை ஒட்டி இருந்த 15 குறுக்க நிலத்தைப் புலிகள் தங்கள் பயிற்சி இடமாக அமைக்க பொருத்தமானதாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். போக்குவரத்துக்கு வாய்ப்பாகவும், தொலைபேசி இணைப்புடன் இருந்த வீடு உள்ளதால் தங்கவும், சமைக்கவும் மேற்கண்ட நிலத்தை ஒட்டியிருந்த ஏறத்தாழ அதே பரப்புள்ள எங்களின் மற்றொரு நிலத்தையும் பயன்படுத்திக் கொண்டார்கள். 1984ஆம் ஆண்டு சனவரியில் தொடங்கிய அந்த பயிற்சிப் பாசறை 1986ஆம் ஆண்டு நவம்பர் வரை மூன்றாண்டுகள் இயங்கியது.

ஈழத்திலும், வடஇந்தியாவிலும் நடந்த பயிற்சிப் பாசறைகளை முதலாவது, இரண்டாவது எனக் கணக்கிட்டு எங்கள் நிலத்தில் மூன்றாம் அணியின் பயிற்சிகள் தொடங்கின.

# பயிற்சிக்கான பொருளியல் தேவை

புலிகள் மிகுந்த பொருளியல் நெருக்கடியில் இருந்த நேரம் அது. தமிழ்நாடெங்கிலும் பரவலாக திராவிடர் கழக இளைஞர் அணியினரின் முயற்சியில் நடத்தப்பட்ட ஈழத்தமிழர் கண்(ணீர்) காட்சியின் உண்டியல் வருமானம் மட்டுமே முதன்மை வருமானமாக இருந்தது. எனவே, அம்மூன்றாம் அணியின் பயிற்சிக் காலம் முழுவதும் எங்கள் பகுதியில் கழகத் தோழர்களிடமும், பொது மக்களிடமும் திரட்டப்பட்ட உணவுப் பொருட்கள், பணம் ஆகியவற்றைக் கொண்டே நடத்தப்பட்டது. தி.மு.க.வின் தமிழ்நாட்டு ஒன்றிய அமைச்சரான சுப்புலட்சுமி (செகதீசன்) அவர்கள் பயிற்சிக் காலம் முழுவதும் மாதத்திற்கு ஏழாயிரம் முட்டைகளைத் தன் பொறுப்பில் திரட்டி அனுப்பிக் கொண்டேயிருந்தார்கள்.

1984இல் வாணியம்பாடியில் நடைபெற்ற, திராவிடர்க் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்களும், மதுரை ஆதீனமும் கலந்து கொண்ட ரூ. ஒரு இலட்சம் (அப்போது அது பெரிய தொகை) நிதியளிப்பு, அன்றைய நாட்றம்பள்ளி அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் அன்பழகன், தி.க.மாவட்டத் தலைவர் கே.கே.சின்னராசு (இன்றைய அ.தி.மு.க. அமைச்சர் சி.வீரமணி அவர்களின் தந்தை) ஆகியோரின் முயற்சியில் நடந்ததே. அதே ஆண்டில் பெங்களூரில் அளிக்கப்பட்ட இரண்டு இலட்ச ரூபாய் நன்கொடை வழங்கிய கர்நாடக தமிழர்ப் பேரவையில் அண்ணாச்சி சண்முகசுந்தரம், பாவலர் பாவிசைக்கோ ஆகியோர் தவிர பெரிதும் பணியாற்றியவர்கள் திராவிடர் கழகத்தவரே. 1985இல் சேலம் நேரு கலை அரங்கில் ‘நட்சத்திர கலை விழா’ ஒன்றை நடத்தினோம். திரைப்பட நடிகர்கள் பலரும், கங்கை அமரனின் இசை நிகழ்ச்சியும் நடந்தன. அந்நிகழ்வை சேலம், ஈரோடு மாவட்ட திராவிடர்க் கழகத் தோழர்களும், முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி, வழக்கறிஞர் சங்கத் தலைவராக நீண்ட காலம் விளங்கிய வழக்கறிஞர் பரமசிவமும் (அ.தி.மு.க) இணைந்து நடத்தியதே அந்நிகழ்வு. அந்நிகழ்வில் கிடைத்த நிதி மூன்று இலட்ச ரூபாய்களாகும். அந்த காலகட்டத்தில் (எம்.ஜி.ஆரின் நிதி உதவி பெறும்வரை) கடும் நிதி நெருக்கடியில் இருந்த புலிகளுக்கு இவையெல்லாம் பேருதவியாக இருந்தன. இந்நிகழ்வுகள் அனைத்திலும் எதிர்எதிர் அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்ட தி.க., தி.மு.க., அ.தி.மு.க ஆகிய

திராவிட இயக்கத்தவர்கள், ஈழ விடுதலைக் களத்தில் இணைந்து பணியாற்றியுள்ளனர் என்பதைக் காணலாம்.

பொடாவில் சிறைப்படுத்தப்பட்ட மருத்துவர் அ. தாயப்பன் தந்தையாரும், அய்யா பழ. நெடுமாறன் அவர்களின் நெருங்கிய நண்பருமான திண்டுக்கல் அழகிரிசாமி அவர்கள் நிலத்திலும், வத்திராயிருப்பு அருகிலும் பயிற்சிகள் நடந்தன.

புலிகளின் அரசியல்பிரிவு இயங்கியதும், அரசியல் பிரிவு பொறுப்பாளர் பேபி சுப்பிரமணியம் ( பின்னாளில் இளங்குமரன் ) தமிழகம் வந்த நாளில் இருந்து 1990ஆம் ஆண்டு ஈழம் செல்லும்வரை தங்கியிருந்ததும் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவர்களின் இல்லத்திலேயே ஆகும். நான் 1990ஆம் ஆண்டு தஞ்சையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநில மாநாட்டில்தான் அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு ஈழம் புறப்பட்டார். அதிலும், அவரை அழைத்துசெல்ல படகு வருவது தள்ளிப் போனதால் , திருச்சியில், பெரியாரியப் பேராசிரியர்கள் நெடுஞ்செழியன், சக்குபாய் ஆகியோரது இல்லத்தில் தோழர் விடுதலை இராசேந்திரனும், பேராசிரியர் சரசுவதியும் உடன் தங்கியிருந்து, வழியனுப்பி வைத்தனர். 1989இல் ஈழம் சென்றிருந்தபோது, தலைவர் பிரபாகரன் அவர்கள் வேடிக்கையாக “என்னாண்ணா, பேபியண்ணனை தி.க.வில் சேர்த்துக் கொண்டீர்களா? விரைவில் அனுப்பிவையுங்கள்” என்றார். புறப்பட்டுப் போனபோது பேபி அவர்களும் அந்த ஆண்டு புரட்சிக் கவிஞரின் நூற்றாண்டு என்பதால் 100 புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் படங்களையும், 25 பெரியார் படங்களையும் வாங்கிச் சென்றார் என்பதும் கூடுதல் செய்தி.

அதைப்போலவே, மற்றொரு ஈழ விடுதலைப் போராளிக் குழுவான 'டெசோ' இயக்கம் அப்போதைய சேலம் மாவட்டம், கொல்லி மலையில் பயிற்சி எடுத்தபோது பயிற்சிக்கு பெரிதும் உதவியவர் அன்றைய தி.மு.க. மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான வீரபாண்டி ச. ஆறுமுகமே ஆவார்.

சேலம் நகரிலும் தங்குவதற்கு மருத்துவம் பெறுவதற்கு தம் பொறுப்பிலேயே அவர் ஏற்பாடுகளும் செய்து கொடுத்தார். அதற்கு உதவியோர் வழக்குரைஞர் சேலம் அருள்மொழி உள்ளிட்ட திராவிடர் கழகத் தோழர்களே ஆவர்.

மேலும், ஒரத்தநாடு அருகே முகாம் அமைத்து பயிற்சிகள் மேற்கொண்ட 'பிளாட்' இயக்கத்துக்கு உதவியவர்கள் ஒரத்தநாடு பகுதி திராவிடர்கழகப் பொறுப்பாளர்களும், பின்னர் அ.தி.மு.க அமைச்சராக இருந்த இன உணர்வாளரான அழகு. திருநாவுக்கரசும், அவரது குடும்பத்தினருமே ஆவர்.

பின்னொரு கட்டத்தில், **திராவிடர் கழக நடுவண் குழு கூட்டத்தில், பிற ஈழ விடுதலை இயக்கங்கள் மீது எவ்வகை தேவையற்ற கருத்துக்களையும் பொதுவெளியில் எழுப்ப வேண்டாம் என்ற அறிவுரையோடு, விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கே நமது கழகம் துணைநிற்க வேண்டுமென திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி அவர்கள் அறிவித்தது முதலாக, திராவிடர் கழகத்தினர் அனைவரும் புலிகள் இயக்கத்துக்கே ஆதரவாக நின்றனர்.**

இதுமட்டுமின்றி, பத்மநாபா அவர்கள் தலைமையில் இயங்கிய ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் பயிற்சிப்பாசறை கும்பகோணம் பகுதியில் நடந்தது. அந்தப் பயிற்சிப் பட்டறைகளுக்காக தம் சொத்துகளை விற்றும் உதவியவர் அண்மையில் முடிவெய்திய குடந்தை ஆர்.பி.எஸ். இசுடாலின் அவர்களே ஆவார். அவரது தந்தையார் ஆர்.பி. சுந்தரம் தஞ்சை மாவட்ட திராவிடர் கழகத் தலைவராக இருந்தவர். 1930களில் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர். இன்றளவும் அவரது குடும்பத்திலும் சாதி மறுப்புத் திருமணங்களே தொடர்ந்து வருகிறது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 1981ஆம் ஆண்டு ஆகத்தில் திண்டுக்கல்லில் நடைபெற்ற திராவிடர் கழக மாநில இளைஞரணி மாநாட்டைத் தலைமை தாங்கி நடத்தியவர்.

29,30.3.1981 ஆகிய நாட்களில் குடந்தையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநில மாநாட்டுக்கு அடுத்த நாள், தோழர் கோவை இராமகிருட்டிணனையும், என்னையும் அவரது இல்லத்துக்கு அழைத்து ஈழவிடுதலையின் தேவை, அறவழிப் போர்கள், ஆயுதப் போர் ஆகியன குறித்த ஆவணங்களை எங்களுக்குக் கொடுத்தார். ஈ.பி.ஆர்.எல்.எப் அரசியல் பிரிவுத் தோழர் ஒருவரை சந்திக்கச் செய்து எமது அய்யங்களைக் களைந்து கொள்ள உதவியவரும் அவரரே ஆவார். ஆனால், நாங்கள் இருவரும் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாக மாறினோம்.

ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக, ஈழத்தில் கருவியேந்திப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு, பிற போராளி இயக்கங்களுக்கு, அவர்களின் படையியல் பயிற்சிகளுக்கு, திராவிடர் இயக்கத்தவர் தந்த ஆதரவு செயற்பாடுகளை, முன்னெடுப்புகளைப் பார்த்தோம். புலிகள் இயக்கத்தின் வேளாண்மை வளர்ச்சிப் பிரிவினருக்கு, வேளாண்மை நுட்பங்களைப் பலமாதங்கள் பயிற்றுவித்தவர்கள் வேளாண் கல்லூரியில் பணிபுரிந்த பெரியாரியப் பேராசிரியர்களே. சிங்கள அரசு ஈழத்துக்கு மின்சாரத்தைத் தடை செய்யலாம் என்பதால், முன்னெச்சரிக்கையாக அமைக்கப்பட்ட கோபர்கேஸ் (பையோ கேஸ்) அமைப்புகளை நிறுவுவதற்கான பயிற்சி அளித்தவர்களும், ஈழம் சென்று லேத்களை நிறுவி பயிற்சியும், 50 தையல்பொறிகளை எடுத்துச் சென்று சீருடை தைக்கும் பயிற்சியும், தமிழகத்தில் உலோகத் தொழில் நுட்பப் பயிற்சியையும் அளித்தோர் அனைவரும் திராவிடர் கழகத் தோழர்களே.

இனி, ஈழ ஆதரவு என்ற காரணத்துக்காக அரசின் நெருக்கடிகளுக்கும், காவல் துறையின் வழக்குகளுக்கும், அத்துமீறல்களுக்கும் ஆளான செய்திகளைப் பார்ப்போம்.

## ஈழ ஆதரவு நடவடிக்களுக்கான அரசின் நெருக்கடி

எம்.ஜி.இராமச்சந்திரன் தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தி.மு.க.வின் நிகழ்ச்சிகளுக்கு குறிப்பாக தி.மு.க. தலைவர் ககலைஞரின் நிகழ்ச்சிகளுக்குக்கூட காவல் துறை உரிய பாதுகாப்பு வழங்கா நிலை இருந்தது. அதனால் அப்போது தி.மு.க.வின் முன்னணித் தலைவராய் விளங்கிய வைகோ, தி.மு.க தோழர்களைக் கொண்ட தொண்டர் படையை உருவாக்கினார். அத் தொண்டர் படைக்கு சீருடை அறிவிக்கப்பட்டது, மாவட்டந் தோறும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அணி வகுப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. உடனே அரசு, எவர் ஒருவரும் சீருடை அணிந்த குழுக்களை அரசின் முன் இசைவின்றி அமைப்பதற்கும், எவ்வகையான அணிவகுப்புப் பயிற்சி வழங்கப்படுவதையும் தடை செய்தது. மீறி நடைபெற்ற தி.மு.க. தொண்டர் படை அணிவகுப்புகளில் கலந்து கொண்டு பயிற்சி எடுப்பவர்களையும் பயிற்சி அளிப்பவர்களையும், பொறுப்பாளர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தது. இது நடந்தது 1983ஆம் ஆண்டாகும்.

அந்த ஆண்டில் தான், ஈழத்தில் நடந்த சூலை வன்முறையை ஒட்டி ஏராளமான இளைஞர்கள் கருவிப் போராட்ட இயக்கங்களில் சேரத் தொடங்கினர். பல இயக்கங்களின் மூத்த உறுப்பினர்கள் இந்திய ஒன்றிய அரசின் ஏற்பாட்டில் வழங்கப்பட்ட பயிற்சி முடிந்து 1983 அக்தோபரில் தமிழகம் வந்தனர். அவ்வாறு திரும்பிய ஆயுதப் போராளி இயக்கத்தவர் ஏற்கெனவே கூறியபடி பல்வேறு பகுதிகளில் திராவிடர் இயக்கத்தவர்கள் பாதுகாப்பில் பாசறைகளை தமிழகத்தின் பல பகுதிகளில் அமைத்தனர். அவ்வாறு திரும்பிய புலிப்படைத் தோழர்கள் 150 பேர் கோவையில் தோழர் கு. இராமகிருட்டிணன் தோட்டத்தில். அவரது பராமரிப்பில் மூன்று திங்கள் தங்கியிருந்தனர்.

அப்போது, அரசியல் களத்தில், அ.தி.மு.க.வுக்கு எதிர்நிலை எடுத்து இயங்கிக் கொண்டிருந்தது திராவிடர் கழகம். தி.மு.க. மீதுள்ள அதே அளவு எதிர்ப்புணர்வும், சினமும் அரசுக்கு திராவிடர் கழகத்தின் மீதும் இருந்தது. ஆனாலும், விடுதலைப் புலிகள் இயக்கத் தோழர்கள் கோவையில் தோழர் கு.இராமகிருட்டிணன் தோட்டத்திலும், பிற

பகுதிகளிலும் உடற்பயிற்சிகளும், அணி வகுப்புப் பயிற்சிகளும் செய்து கொண்டுதான் இருந்தனர். 1984 சனவரியில் கொளத்தூர் புலியூரில் எங்கள் தோட்டத்தில் தொடங்கப்பட்ட பயிற்சிப் பாசறையிலும் அணிவகுப்பு, உடற்பயிற்சி ஆகியவற்றோடு கயிறு ஏறுதல், உயரச் சுவர் தாண்டுதல் போன்றவை மட்டுமின்றி, பல்வேறு படையியல் பயிற்சிகளும், ஆளுமைப் பயிற்சிகளும் ஏறத்தாழ ஓராண்டு காலம், அரசின், உளவுத் துறையின் கவனத்துக்குக் கூட செல்லாமலே நடந்தேறின. அவ்வாறே தான் தமிழகத்தின் பல பகுதிகளிலும், வேறு இயக்கங்களின் பயிற்சிப் பாசறைகள் இயங்கி வந்தன. முதல்வர் எம்.ஜி.ஆரின் ஆதரவு புலிகளுக்கு முழுமையாய் கிடைக்கும் வரை பயிற்சிகள் கமுக்கமாகவே நடந்தேறின.

வழக்குகள் எதுவும் பதியப்படவில்லை . கைதுகள் எதுவும் நடைபெறவில்லை , எனினும், அவற்றை எதிர்பார்த்தே இவை அனைத்தும் நடந்தன.

மேலும் செயவர்த்தனே தில்லி வருகை , வடமராச்சி வானூர்தி குண்டு வீச்சு, பாலசிங்கம் ஆகியோர் நாடு கடத்தப்பட்டமை, இராஜீவ் செவயர்த்தனே ஒப்பந்தம் எரிப்பு, புலிகளிடம் இருந்து ஆயுதப் பறிப்பு, தொலை தொடர்புக் கருவிகள் பறிப்பு , அமைதிப்படை எதிர்ப்பு, அமைதிப்படைக்கு ஆதரவாக பொய்ச் செய்திகள் பரப்பிய தொலைக்காட்சி நிலைய மறியல் போன்ற பல போராட்டங்கள் திராவிடர் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டன. தொலைக்காட்சி நிலைய மறியல் போராட்டத்தில் திராவிடர் கழகத்தோடு, அய்யா பழ. நெடுமாறன் தலைமையில் அப்போது இயங்கிவந்த தமிழ்நாடு காமராசர் காங்கிரசு கட்சியும் பங்கேற்றது. இந்த எல்லா போராட்டங்களிலும் 15 நாட்களுக்குக் குறையாத சிறைதான். இவ்வாறான எல்லாப் போராட்டங்களிலும் தமிழ்நாடெங்கும் ஆயிரத்து ஐநூறு முதல் இரண்டாயிரத்து ஐநூறு பேர் வரை திராவிடர் கழகத் தோழர்கள் சிறையில் இருந்துள்ளனர். ஆயுதப் பறிப்புக்கு எதிராக தலைவர் பிரபாகரன் தண்ணீரும் அருந்தாமல் பட்டினிப்போர் நடத்தினார். அப்போது தில்லியில் இருந்த முதல்வர் எம்.ஜி.ஆர் சென்னை திரும்பியதும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் திருப்பிக்கொடுக்கப் பட்டதுடன், அதற்குக் காரணமாகக் கருதப்பட்ட காவல்துறை இயக்குநர் மோகன்தாஸ் பல்லவன் போக்குவரத்துக் கழக இயக்குநராக பணிமாற்றம் செய்யப்பட்டார். தலைவர் பிரபாகரனின் பட்டினிப் போரை

பழச்சாறு கொடுத்து முடித்துவைத்தவர் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்களே ஆவார்.

ஈழப்போர் நிலவரங்களை, ஈழம் குறித்த செய்திகளைத் தொடந்து வெளியிட்டு வந்ததும் தி.க. நாளேடான 'விடுதலை' ஏடே ஆகும். புலிகளின் சந்திப்பு இடமாக அப்போது விளங்கியதும் பெரியார் திடலேயாகும். அதனால்தான் புலிகள் இயக்கம் 1992இல் தடை செய்யப்பட்டபோதும், ஒவொரு முறை தடை நீட்டித்தபோதும், அத்தடை ஆணைகள் 'தமிழீழ விடுதலைப் புலிகள், மே/பா. பெரியார் திடல், சென்னை- 7 ' என்று முகவரி இடப்பட்டு பெரியார் திடலிலேயே ஒட்டப்பட்டன. ஒவ்வொரு தடையின்போதும், தடையை எதிர்த்து ஆணையத்தில் வழக்காடியவரும் அண்ணன் வை.கோ.வே ஆவார்.

## இந்திய அமைதிப்படை அத்துமீறல்கள்

1987இல் இந்திய ஒன்றிய அமைதிப்படை ஈழம் சென்றது. சிங்களப் படையினரின் அத்துமீறல்களில் இருந்து, ஈழத் தமிழ் மக்களைக் காப்பதற்காக அனுப்பப்பட்டதாகச் சொல்லப்பட்ட இந்திய ஒன்றிய அமைதிப்படை, சிங்களப் படையினர் நிகழ்த்தி வந்த அதே அத்துமீறல்களைச் செய்யத் தொடங்கிது. முற்று முழுதாக சிங்கள அரசுக்கு ஆதரவாகவும், தமிழ் மக்களுக்கு எதிராகவும் இந்திய ஒன்றிய அமைதிப்படை இயங்கியதால் தமிழ் மக்களைக் காக்க, புலிகள் இந்திய ஒன்றிய அமைதிப் படைக்கு எதிராக போர் தொடங்க வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டது.

புலிகளுக்குத் தேவையான எரிபொருள், வெடி பொருள் முதலாக அனைத்தும் தமிழ்நாட்டில் இருந்துதான் சென்றாக வேண்டும். இந்திய ஒன்றிய அமைதிப் படைக்கு எதிரானப் போரைப் புலிகள் தொடங்கியதும், இந்திய ஒன்றியத்திற்கும் ஈழத்துக்கும் இடையிலான கடற்பரப்பை இந்திய ஒன்றிய கப்பற் படை கூர்மையாக கண்காணிக்கத் தொடங்கியது. கடலோரச் சாலைகள் ஒன்றிய அரசின் காவற் படைகளின் கட்டுப்பாட்டுக்கு மாற்றப்பட்டது. உளவுத் துறைகளும் கண்காணிப்பைத் கூர்மைப்படுத்தின.

அந்த கால கட்டத்தில் புலிகள் இயக்கத்தின் இந்திய ஒன்றியப் பொறுப்பாளர்களின் அலுவலம், செய்தித் தொடர்பு அலுவலம் ஆகியவை சேலத்திலும், அதன் சுற்றுப்

புறங்களிலும் திராவிடர் கழக முன்னணி அமைப்புகளின் தோழர்களின் இல்லங்களிலேயே இயங்கிவந்தன. அதுபோலவே எரிபொருள், வெடி பொருள், சீருடைகள் என அனைத்தையும் கொள்வனவு செய்யவும், அவற்றைத் தங்கள் பொறுப்பில் கடற்கரைவரை கொண்டு செல்லும் பணிகளை மேற்கொண்டவர்களும் திராவிடர் கழகத் தோழர்கள், திராவிடர் இயக்க ஆதரவுத் தோழர்களே ஆவர்.

அமைதிப்படையுடனான போரில் காயம்பட்டு வந்த போராளிகளுக்கு மருத்துவம் செய்ததும் சேலம், ஈரோடு பகுதிகளில் தான். (சேலம் மருத்துவ உதவிகளுக்கு ஏற்பாடுகளைச் செய்து உதவியவர் அன்றைய அ.தி.மு.க அமைச்சர் பொன்னையன் ஆவார்.) மருத்துவம் பயனின்றி பலர் இறந்தும் உள்ளனர். அவர்களின் உடலுக்குப் புலிகளின் சீருடை அணிவித்து, பொதுமக்கள் பின்தொடர இறுதி ஊர்வலம் நடத்தி உடலை உரிய மதிப்புடன் எரியூட்டியதும், எச்சங்களையும், சாம்பலையும் சேகரித்து, இறுதி நிகழ்வின் புகைப்படங்களுடன் ஈழத்துக்கு அனுப்பி வைத்தவர்களும் திராவிடர் கழகத் தோழர்களே ஆவர். தளபதி நவம் போன்ற புலி மாவீரர்களின் இறுதி நிகழ்வுகள் கொளத்தூரில் எங்கள் தோட்டத்தில்தான் நடைபெற்றன. எங்கள் வீட்டிலிருந்துதான் எல்லா இறுதி ஊர்வலங்களும் புறப்பட்டன. இவை அனைத்தும் நடைபெற்றது இந்திய ஒன்றிய அமைதிப் படைக்கும் புலிகளுக்கும் ஈழத்தில் கடும் போர் நடந்துவந்த நெருக்கடியான கால கட்டத்தில்தான்.

இவை மட்டுமின்றி, காயம்பட்ட போராளிகளைத் தங்கள் வீடுகளில் தங்க வைத்திருந்தவர்களும் திராவிடர் கழகத் தோழர்கள்தான். அக் காலகட்டத்தில் இதற்காக இருமுறை கைது செய்யப்பட்டவர்கள் (தற்போது சேலம் மாவட்டத் திராவிடர் கழகத் தலைவராக உள்ள) சிந்தாமணியூர் சுப்பிரமணியம், (சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவராய் உள்ள) சக்திவேல், அவரது உடன்பிறப்பு ஆசிரியர் கிருட்டிணமூர்த்தி, லோகநாதன் ஆகிய நால்வரும் அன்றைய திராவிடர் கழகத்தவரே ஆவர்.

அவ்வாறே, இந்திய ஒன்றிய அமைதிப் படை ஈழத்தில் இருந்த காலகட்டத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனால் அழைக்கப்பட்டு ஈழம் சென்றோர் பட்டியலில் உள்ளோரைப் பார்த்தாலும் அறியலாம். 1989ஆம் ஆண்டின் தொடக்கத்தி லேயே (பெப்ரவரி, மார்ச்சு)

வைகோ ஈழம் சென்று வருகிறார். தலைவர் பிரபாகரனை சந்தித்ததோடு இரண்டு மாதம்கள் அவருடன் தங்கியிருந்து, புலிகளின் பல்வேறு கட்டமைப்புகளைப் பார்த்து விட்டு, திரும்பும்போது சுண்டிக்குளம் என்ற இடத்தில் சுற்றி வளைக்கப்பட்டு தப்பிவந்து தமிழகம் சேர்ந்தார்.

திரும்பிய மூன்று திங்கள் காலத்தில் மாத்தையாவால், பிரபாகரன் சுடப்பட்டார் என்ற பொய்ச் செய்தி ஒன்று உலவ விடப்பட்டது. தினமலர் போன்ற ஏடுகள் பிரபாகரன் உடல் சந்தனப் பொட்டிட்டு, பெட்டியில் வைத்துப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்றும், பொதுமக்கள் சாரை சாரையாக வந்து அகவணக்கம் செலுத்துகிறார்கள் என்றெல்லாம் செய்திகளை வெளியிட்டார்கள். உடனே உரிய இடங்களில் தொடர்பு கொண்டு உண்மையறிந்து - தலைவர் பிரபாகரன் நலமுடன் களத்தில் நிற்கிறார் என தமிழ் உணர்வாளர்கள், சேலம் - தமிழ் இளைஞர் பேரவை, சேலம் - விடுதலைப் புலிகள் தோழமைக் கழகம், சேலம் போன்ற பெயர்களில் ஆயிரக்கணக்கில் சுவரொட்டி அச்சிட்டு, சேலம் நகரில் இருந்து அனைத்து ஊர்களுக்கும் செல்லும் பேருந்துகளிலும், சரக்குந்துகளிலும், தொடர் வண்டிகளிலும் தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் சுவரொட்டிகளை ஒட்டியதும் சேலம் மாவட்ட திராவிடர் கழகத் தோழர்கள்தான்.

# திராவிட தலைவர்களின் ஈழப் பயணம்

1989 நவம்பர் 27ஆம் நாளில் தலைவர் பிரபாகரன், 'முதல் களப் பலியான (1982இல்) சங்கர் (எ) சத்தியநாதனின்' உயிர் பிரிந்த நாளான நவம்பர் 27ஆம் நாளை, இனி ஆண்டுதோறும் மாவீரர் நாளாக கடைப்பிடிக்குமாறு அறிவித்தார். அதுமட்டுமின்றி, 1990 ஆண்டில் காடுகளுக்குள் நிலைகொண்டிருந்த புலிப் படையை, நாட்டுக்குள் நகரங்களுக்குள் ஊர்களுக்குள் அனுப்பி, இந்திய ஒன்றிய அமைதிப் படையை எதிர்கொள்வது என்று முடிவெடுத்து இருந்தனர். நாடுகளுக்குள் இயக்கம் எவ்வாறான கட்டமைப்புகளை உருவாக்கி வைத்திருந்தது என்பதை புலிகளின் ஆதரவாளர் ஒருவர் முழுதுமாக பார்த்தறிய வேண்டும் என்றும் விரும்பியுள்ளார் தலைவர் பிரபாகரன். இவற்றைக் கருத்தில் கொண்டு என்னை ஈழம் வர அழைத்து, புலிகளின் இந்தியப் பொறுப்பாளர் வழியாக மடல் அனுப்பியிருந்தார்.

ஈழம் சென்று தலைவர்களையும், படை அணித் தலைவர்களையும் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். தலைவர் பிரபாகரன் தங்கியிருந்த பாசறையில் இருந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முகாமாக - பெண்புலிகள் தங்கியிருந்த பாசறை - போர் நடவடிக்கையில் ஈடுபடுமுன் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கும் பாசறை - கண்ணி வெடிகள் போன்றவை உருவாக்கும் பாசறை - ஆங்கில படையியல் நூல்களை, புரட்சித் தொடர்பான நூல்களை தமிழில் மொழி பெயர்க்கும் பணி நடைபெற்ற பாசறை, சீருடைகள் உருவாக்கப்படும் பாசறை, ஆயுதக் கிடங்குகள், தரைக்குக் கீழே அமைக்கப்பட்டிருந்து 200 மீட்டர் நீளமுள்ள சுடுதளம், என பல்வேறு அமைப்புகளைக் கண்டுவிட்டு, இரவு தலைவரின் பாசறைக்கே திரும்புதல் என இருந்தேன். சில நாட்கள் தலைவருடனேயே தங்கியிருந்து பல செய்திகளைக் கலந்து பேசும் வாய்ப்பினையும் பெற்றேன். திரும்பும்போது முல்லைத் தீவு, அரசியல் பிரிவு அலுவலகம், விசுவமடு புலிகளின் சோதனைச் சாவடி போன்ற வற்றைப் பார்த்தவண்ணம் திரும்பினேன். திரும்பும் போது வல்வட்டித் துறைவரை புலனாய்வுப் படைப் பிரிவின் தலைவர் பொட்டம்மானும், படைத் தலைவர் பானுவும் 120 புலிப்படை வீரர்களும் பாதுகாப்புக்காக என் உடன் வந்தார்கள். அண்ணன் வைகோ அவர்களைச் சுற்றி வளைத்த அதே சுண்டிக்குளத்தில் இந்திய ஒன்றிய அமைதிப்படை சுற்றி வளைத்தது. இரண்டு நாட்கள் இரு தரப்பினரும் அங்கங்கேயே நிலைகொண்டு நின்றனர். இரண்டு

நாட்களுக்குப் பின்னர் தரை வழியே செல்லமுடியாமல் இரவில் கடலுக்குள் நெடுந்தொலைவு எதிர்த்திசையில் சென்று நடுகடலுக்குப் போய் சுற்றிக் கொண்டு வல்வெட்டித்துறை வந்து, பின்னர் தமிழகம் திரும்பினேன். அப்போது தலைவர் பிரபாகரனோடு எடுத்த புகைப்படங்கள்தான் தலைவர் சுடப்பட்டார் என்ற பொய்ச்செய்தியை பொய்யாக்கியது.

அடுத்த சில திங்களில் தோழர் கோவை இராமகிருட்டிணன் ஈழத்துக்கு அழைக்கப்பட்டார். திருச்சி விடுதலைப் புலிகள் தோழமைக் கழகத்தின் தலைவரும், பின்னர் மதிமுகவில் இயங்கியவருமான வழக்கறிஞர் மருதநாயகம் போன்றோரும் சென்று வந்தார்கள்.

# கைது படலங்கள்

முன்னதாகவே (1988 என நினைவு) பட்டினங்காத்தான் ஆய்வுச் சாவடி வழக்கில் இந்திய ஒன்றியப் பொறுப்பாளர் கிருபன் உட்பட விடுதலைப் புலிகள் சிலர் கைது செய்யப்பட்டனர். செய்தியைக் கேள்விப்பட்ட நானும், சேலம் மாவட்ட திராவிடர் கழக இளைஞரணித் தலைவர் மேட்டூர் கருப்பரசனும் பட்டுக்கோட்டை நீதிமன்றம் சென்று, திராவிட முன்னேற்றக் கழகத்தவரும், பின்னர் புதுக்கோட்டை நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டவருமான வழக்கறிஞர் செல்வராசு அவர்கள் வழியாக பிணை விண்ணப்பம் போட்டு, பிணை ஆணையைப் பெற்றோம். ஆனால் பிணை ஆணையோடு திருச்சி வழக்கறிஞர் மருதநாயகமும் நானும் திருச்சி நடுவண் சிறைக்கு சென்றபோது அவர்களை சேலம் நடுவண் சிறைக்கு மாற்றியிருந்தார்கள். சேலம் நடுவண் சிறையை அணுகியபோது, புலிகளை சென்னை நடுவண் சிறைக்கு மாற்றியிருந்தார்கள். அய்யம் கொண்ட நாங்கள் அண்ணன் வைகோ அவர்களைத் தொடர்பு கொண்டு, நடந்த செய்திகளைக் கூறி, ஒருவேளை புலிகள் மீது தேசியப் பாதுகாப்பு சட்டம் ஏவப்படுமோ என்ற எங்கள் கருத்தைக் கூறி, அதைத் தடுப்பதற்கு ஏதேனும் முயற்சிக்குமாறு வேண்டிக் கொண்டு சென்னையை நோக்கிப் பயணமானோம். ஆனால் அடுத்த நாள் காலை சென்னை சிறைக்குச் சென்றபோது அவர்களுக்கு தேசியப் பாதுகாப்புச் சட்ட ஆணை வழங்கப் பட்டிருந்தது. எனவே, அவர்களை சந்திக்கவும் எங்களுக்கு இசைவு கொடுக்க வில்லை.

அண்ணன் வைகோவை அழைத்து இந்த செய்திகளைக் கூற, இரவே உள்துறைச் செயலனிடம் பேசியபோதே முன்பே இந்த செய்தித் தெரியவந்ததைக் கூறினார். இப்போது போல் அப்போது அலைபேசி இல்லாததால் அதனை வை.கோ.வால் எமக்குக் கூற முடியவில்லை.

இந்திய ஒன்றிய அமைதிப்படையோடு நடந்த மோதலில் காயம்பட்டு, மருத்துவத்துக்காக வந்தோரில் படைத் தளபதி ரோய் என்பவரும் ஒருவர். அவர் கொளத்தூர் புலியூரில் நடந்த 10ஆவது பிரிவுக்குப் பயிற்சியாளராக இருந்தவர். தமிழகத்துக்கு வந்த அவரை முதலில் ஈரோட்டில் ஒரு மருத்துவமனையில் தான் சேர்த்தோம். ஆனால், மேலும் சிறப்பு மருத்துவம் தேவைப்பட்டதால் அவரை

வெங்காளூர் (பெங்களூர்) அழைத்துச் செல்ல வேண்டி இருந்தது. சில மாதம் அங்கு மருத்துவம் அளிக்கப்பட்டும், பயனின்றி 1990ஆம் ஆண்டு திசம்பர் 31ஆம் நாள் அவர் மாவீரர் ஆனார். உடல் உடனே புலியூர் பயிற்சிப் பாசறைக்கு எடுத்துவரப்பட்டு. 1991ஆம் ஆண்டு சனவரி முதல்நாள் அவரது வித்துடலை அங்கேயே புதைத்தோம். வித்துடல், இரண்டு இடங்களில் ஆய்வுச் சாவடிகளைக் கடந்துதான் எம்மால் எடுத்துவரப்பட்டது.

1990ஆம் ஆண்டின் இறுதியில் தமிழகக் காவல் துறையினரால் பல இடங்களில் விடுதலைப் புலி மறவர் பலர் கைது செய்யப்பட்டனர். தமிழகத்திலிருந்து ஈழம் திரும்ப கடற்கரை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த இரண்டு வண்டிகள், புதுக்கோட்டை மாவட்டம், ஏம்பலை அடுத்த மீமிசலில் ஒன்று, மற்றொன்று அறந்தாங்கியை அடுத்த கட்டு மாவடியிலும் தடுத்து நிறுத்தி, எடுத்துச் செல்லப்பட்ட எரிபொருள் (டீசல்) குடுவைகளை கைப்பற்றியதோடு, பயணம் செய்த மறவரும் கைதாகினர். கைது செய்யப்பட்ட ஆண் மறவரை திருச்சி நடுவண் சிறையிலும், பெண் மறத்தியரை திருச்சி வெங்காயப்பேட்டை பெண்கள் சிறையிலும் அடைத்திருந்தனர். அவர்களைப் பார்த்து தேவையானப் பொருளை வாங்கித் தரவும், பிணையில் எடுக்கவும் நானும், அப்போதைய ஈரோடு மாவட்டத் திராவிடர் கழக மாவட்டச் செயலாளரான தோழர் பிரகலாதனும் புறப்பட்டுச் சென்றோம். பிணை கோரிக்கை மீது சொற்போர் நடத்த சென்னையிலிருந்து தற்போதைய திராவிடர் கழக சட்டத்துறை செயலரும் உயர் நீதிமன்ற வழக்குரைஞரும் த. வீரசேகரன் சென்னையில் இருந்து வந்தார், அவர் சென்னையில் இருந்து புறப்படும் போதே தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த திமுக அரசை, புலிகளுக்கு அரசு பல ரகசியங்களைக் கூறுகிறது என்பதை ஒரு குற்றச் சாட்டாகக் கூறி, ஒன்றிய அரசு தமிழ்நாட்டு அரசைக் கலைத்து விட்டு குடி அரசுத் தலைவர் ஆட்சியை நடைமுறைப்படுத்தி இருந்தது. இச் செய்தியைப் புதுக்கோட்டையில் இருந்து நாம் அவரைத் தொடர்பு கொண்டபோது இந்த ஆட்சிக் கலைப்பு செய்தியை எம்மிடம் கூறினார். உடனே, தமிழ்நாட்டின் அரசுத்துறை நடவடிக்கைகளில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டது. புதுகை வந்து சேர்ந்த வழக்குரைஞர் வீரசேகரன் எங்கள் இருவரையும் உடனே புதுக்கோட்டையை விட்டுப் புறப்பட்டுவிடுமாறு கூறினார். நாமும் ஈரோட்டிலும், சேலத்திலும் மருத்துவமனைகளில்

இருந்த புலி மறவர்க்கு வேறு ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருந்தது. நான் எப்படியோ சமாளித்துக் கொள்வேன் எனக் கூறி எங்களை அனுப்பிவைத்தார்.

அவர் எதிர்பார்த்ததைப் போலவே வழக்குரைஞர் (தோழர்) வீரசேகரன் மீது மகிழுந்துத் திருட்டு வழக்கொன்று புனையப்பட்டு அவரைத் கைது செய்ய புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (திரிபாதி) ஏற்பாடு செய்தார். புதுக்கோட்டை வழக்குரைஞர் கழகம் தலையிட்டு தோழர் வீரசேகரனை அனுப்பி வைத்துள்ளனர். ஆனால், அவர் வந்திருந்த மகிழுந்தை மட்டும் கொடுக்க மறுத்துவிட்டது காவல்துறை.

எனவே, சிறையில் இருந்தோரைப் பிணையில் எடுக்க முடியவில்லை. அவர் அனைவரும் புதிதாக அப்போது உருவாக்கப்பட்டிருந்த வேலூர் சிறப்புக் முகாமில் அடைக்கப்பட்டு விட்டனர்.

ஆட்சி கலைக்கப்பட்ட அடுத்த நாள் (31.1.1991), ஈரோடு, சேலம் மருத்துவமனைகளில் மருத்துவம் பெற்றுவந்த விடுதலைப் புலிமறவரைக் கண்காணிக்க காவல்துறையினர் நிறுத்தப்பட்டனர். ஆனால், அதற்கு முன்னதாகவே எழுந்து நடமாடமுடியாத அளவுக்கு நோய் பாதிக்கப்பட்டிருந்தவர்களைத் தவிர மற்றவரை மருத்துவமனையிலிருந்து, தோழர்களின் இல்லங்களுக்கு மாற்றி இருந்தனர். பிப்ரவரி முதல்நாள் நாம் ஊர் திரும்பினோம்.

அதேவேளை ஆட்சிக் கலைப்புக்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகம் பிப்ரவரி ஆறாம் நாள் முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விட்டது. அதையொட்டி தமிழ்நாடெங்கிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தவரையும், பல இடங்களில் திராவிடர் கழகத்தவரையும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாகத் கைது செய்தனர். அவ்வகையில் என்னையும் 2.2.1991இல் கைது செய்தனர். என்னை சிறைக்கு அனுப்புவதற்கு முன்னதாக தோழர் வழியாக ஆறாம் நாள் முழு அடைப்புப் போராட்டம் முடிந்ததும் எங்களை பிப்ரவரி ஏழாம் நாள் விடுதலை செய்துவிடுவர்; விடுதலையாகி வந்தபின்னர் இடமாற்றங்களை செய்து கொள்ளலாம் என செய்தி அனுப்பினேன். என்றபோதிலும் எம் பகுதியில் தங்கியிருந்த விடுதலைப் புலிகள் வெவ்வேறு இடங்களுக்கு மாற முற்பட்டனர். அவ்வாறு இடம்மாறிச் சென்றவர்களில் சிலர் சென்னை அருகே பிடிப்பட்டனர்.

செயா என்ற பெண்புலி ஒரு போர் நடவடிக்கையில் குண்டு பாய்ந்து முகத்தில் பெருங் காயம் அடைந்திருந்தாள். அவளது, ஒரு பக்க கன்னமே சிதைந்து போயிருந்தது. அவளுக்குத் தொடர் மருத்துவம் அளிக்க ஈரோட்டிலிருந்து சென்னைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். வேலூர் மாவட்டம் வாலாசாப்பேட்டை அருகே வண்டிகள் ஆய்வு மேற் கொண்டிருந்த காவல் துறை அவரைத் கைது செய்தது. இவ்விரு செய்திகளையும் சிறையில் இருந்த நான் செய்தித்தாள்களில் படித்தறிந்தேன். முன்னேற்பாட்டில் சிறை வைக்கப்பட்டிருந்த அனைவரும் முழு அடைப்பு அறிவிக்கப் பட்டிருந்த 6.2.1991 முடிந்ததும் 7.2.1991 அன்று பிற்பகல் விடுவிக்கப்பட்டோம். 8.2.1991 காலை கொளத்தூர் காவல் நிலைய துணை ஆய்வாளர், வேலூர் வட்ட காவல் துறை துணைத் தலைவர் திரு. பஞ்சாபகேசன் என்னை சந்திக்க விரும்புவதாகக் கூறினார். திரு. பஞ்சாபகேசன் ஒர் இன உணர்வாளர், நல்ல பண்பாளர். பிற்காலத்தில் அ.தி.மு.க. தி.மு.க என இரண்டு கட்சிகள் ஆட்சியிலும் உளவுத்துறைத் தலைவராகச் சிறந்த பணியாற்றியவர். பல்வகைகளில் ஈழ ஆதரவு முயற்சிகளுக்கு, சட்ட வரம்புக்கு உட்பட்டு உதவியவர். (அப்போது சேலம் மாவட்டம் வேலூர் காவல் வட்டத்துடன் இணைக்கப் பட்டிருந்தது)

ஏற்கெனவே நடந்த ஒரு நிகழ்வினை இந்த இடத்தில் குறிப்பிட்டாக வேண்டும். 1989-90ஆம் ஆண்டு திமுகவின் ஆட்சிக் காலத்தின் இறுதி பகுதியில் வேலூரில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டன. இதுகுறித்து ஏற்கெனவே கூறியுள்ளேன். வேலூரில் கோட்டைக்குள் இருந்த திப்புமகாலில் போராளிக்கும், ஐதர் மகாலில் ஆயுதப் போராட்டத்துக்கு உதவிய ஈழத் தமிழர் குடும்பங்களுக்கும் என தடுத்து வைக்கப் பட்டிருந்தனர். 1991 சனவரி மாதம் வரவிருந்த தைப் பொங்கலை ஒட்டி, தடுத்து வைக்கப்பட்டிருந்த புலிகளுக்கு புத்தாடை, பழம் போன்றவற்றை வாங்கிக் கொண்டு செல்ல எண்ணியிருந்தேன்.

அந்த ஆண்டு மாவீரர் நாள் நிகழ்வுகள் உரிய காலத்தில் எடுக்கப்படாமல், 1991 சனவரி 10இல் சேலத்தில் நேரு கலையரங்கிலும், சனவரி 11 அன்று ஈரோடு பெரியார் மன்றத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இரு நிகழ்விலும் பாவலர் அப்துல்காதர், இன்குலாப், செல்வபாரதி போன்ற பாவலரைக் கொண்ட பா அரங்கமும், சேலம் அருள்மொழி, அப்போதுதான் விடுதலை அடைந்து திலீபன் மன்றம் நடத்திக் கொண்டிருந்த தோழர் தியாகு போன்றோரைக் கொண்ட கருத்தரங்கமும் திராவிடர்

கழக மாவட்டக் கழகம் பலவற்றாலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இரண்டாம் நாள் ஈரோட்டில் நிகழ்வு பல ஏற்பாடு செய்து கொண்டிருந்த போது ஈரோடு காவல்துறை சிறப்புப் பிரிவைச் சார்ந்தவர் வேலூர் வட்ட காவல்துறை துணைத் தலைவர் பேசச் சொன்னதாக ஒரு தொலைபேசி எண்ணைக் கொடுத்தார். நான் பேசிய போது காவல்துறை துணைத் தலைவர் உடனடியாக என்னைப் புறப்பட்டு வருமாறு கூறியதாகவும், அவசரம் என்றும் கூறினார். உடனடியாக புறப்பட்டு சேலம் போய் வாங்கி வைத்திருந்த பொருள்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். காவல்துறையின் ஒரு மகிழுந்தோடு சேலத்தில் காத்திருந்தனர். எனது சீருந்தை சேலத்தில் விட்டுவிட்டு மகிழுந்தில் புறப்பட்டு, பிற்பகல் 3.00 மணியளவில் வேலூர் சேர்ந்தோம். அவர் அப்போது ஒரு அலுவல் கூட்டத்தில் இருப்பதாகவும், 4.30 மணிக்கு சந்திக்கலாம் என்று கூறியதாகச் சொன்னார். அதற்குள் சிறப்பு முகாம் சென்று புலித் தோழர்களைச் சந்தித்துவிட்டு வரலாம் என்று சிறப்பு முகாம் சென்றபோது, வழக்கமாக என்னைச் சந்திக்க இசைவளிக்கும் நிலைக்கு மாறாக, அன்று இசைவு மறுத்தனர். யாரும் காரணத்தைக் கூறவில்லை .

மாலை காவல்துறை துணைத் தலைவரைச் சந்தித்தபோதுதான் அவர் சில தகவல்களைக் கூறினார். ஐதர் மகாலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குடும்பங்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே சிறு சச்சரவாய் தொடங்கிய மோதல், தீ வைப்பு, இருபுறமும் தாக்குதல் என்ற அளவுக்கு பெரிதாய் வெடித்ததாகவும், பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினான். குடும்பங்களுக்கு ஆதரவாக போராளிகள் பலரும் காவல்துறையினருடன் மோதிக் கொண்டதாகவும் போராளிகள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். அவர்க்கு உரிய அறிவுரைகள் கூறி நிருவாகத்துக்கு ஒத்துழைப்பு கொடுக்குமாறு வலியுறுத்துமாறு கேட்டுக் கொண்டார். நான் கைது செய்யப்பட்ட போராளியின் பெயர்ப் பட்டியலைப் பார்த்துவிட்டு, கைது செய்யப்பட்டுள்ள இருபது பேரில் மூவர் மட்டுமே புலிகள் அமைப்பினர் என்பதையும், போராளிகள் என தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏறத்தாழ ஐம்பது பேரில் பதினாறு பேர் மட்டுமே புலிகள் இயக்கத்தினர் என்று கூறினேன். பின்னர் புலிகள் அமைப்பின் பொறுப்பாளரை மட்டும் தனியே அழைத்துப் பேசி செய்திகளைப் பகிர்ந்து கொண்டேன். அதன் பின்னர் மோதலின் காரணம், மோதலில் ஈடுபட்டோர் பற்றிய செய்தியினை காவல்துறை துணைத் தலைவரிடம் கூறிவிட்டு, தவறாக கைது

செய்யப்பட்டுள்ள மூவரையும் திரும்பவும் சிறப்பு முகாமிற்கு அழைத்து வந்து உதவுமாறு கேட்டுக் கொண்டேன். நான் கொண்டு சென்றிருந்த பொருள்களை, அவரே வாங்கி வைத்துக் கொண்டு, அடுத்தநாள் காவல் அலுவலர் வழியாகக் கொடுத்தனுப்பியதோடு, அவரும் அடுத்தநாள் பிற்பகலில் சிறப்புக் கூடாரம் சென்று புலி இயக்கத் தோழர்களைத் தனியே அழைத்து உரையாடிவிட்டும் வந்துள்ளார்.

எனவே, வேலூர் வட்ட காவல்துறை துணைத் தலைவர் என்னைச் சந்திக்க விரும்புகிறார் என்றவுடன், நடந்த பழைய நிகழ்வுகளை மனத்தில் கொண்டு, அது போன்றதொரு சிக்கலுக்காகவே அழைக்கின்றார் என்றே நான் கருதினேன், அவர்களுடன் புறப்பட்டுச் சென்றேன். முதலில் வேலூர் காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்துக்கே அழைத்துச் செல்லப்பட்டேன். அதன்பின்னர் அங்கிருந்து வாலாசாப்பேட்டை காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு சென்ற பின்னர்தான், 4.2.1991இல் சென்னை செல்லும் வழியில் கைது செய்யப்பட்ட புலிகளின் வழக்கில் என்னையும் சேர்த்திருக்கிறார்கள் என்பதை அறிந்தேன். அடுத்தநாள் நீதிபதி முன் நேர்நிறுத்தி சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டேன். சிறை சென்ற இரண்டு நாட்கள் கழித்து ஈரோடுயைச் சேர்ந்த சீனிவாசன், புலிகள் சென்ற மகிழுந்தின் ஓட்டுநர் ஆகியோர் சிறைக்கு வந்தனர். தோழர் சீனிவாசன் அப்போதைய ஈரோடு நகர திராவிடர் கழகத்தின் தலைவரும், பின்னர் நீண்ட காலம் ஈரோடு மாவட்ட திராவிடர் கழகத் தலைவராயிருந்த பெரியார் பெருந் தொண்டர் மாரப்பனார் மகன் ஆவார்.

1991ஆம் ஆண்டு சனவரி இறுதியில் தி.மு.க அரசு கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப்பட்டவுடன், ஈரோடு மருத்துவமனையிலிருந்த புலிகளை நாங்கள் தங்கவைத்த இடங்களில் ஒன்றுதான் ஈரோடு நகர திராவிடர் கழகத் தலைவர் மாரப்பனார் இல்லம் ஆகும்.

அவரது மகன் சீனிவாசன், அந்த காயம்பட்ட செயா, தமிழியா, சந்திரிகா ஆகிய புலிகளை தனது மகிழுந்திலேயே சென்னை அழைத்துச் செல்லும்போது, சேலம் அருகே மகிழுந்தில் சிறு பழுது ஏற்பட்டதால், நீண்டத் தொலைவு பயணம் என்பதால், வாடகை வண்டியில் செல்லும் வழியில், வேலூர் மாவட்டம் வாலாசாபேட்டை அருகில், எதிர்பாராமல் நடந்த காவல்துறையினரின் ஆய்வில்தான் அவர்கள் கைது

செய்யப்பட்டனர். வாடகை மகிழுந்தை ஓட்டிவந்த ஓட்டுநர் சேலத்திலிருந்து வருவதாக, விசாரணையில் சொன்னதை வைத்துக் கொண்டு - புலனாய்வுப் பிரிவின் தலைமை சென்னையில் இருந்து - என் பெயரையும் வழக்கில் சேர்க்கச் சொல்லியுள்ளனர். அது போதாதா நம் காவல்துறையினருக்கு? சேலத்தில் மகிழுந்தை நான்தான் வாடகை பேசி முன்பணம் கொடுத்தேன் என்று ஓட்டுநரிடமும், புலித் தோழர்களுக்கு ரூபாய் 2,85,000 பணம் கொடுத்து வழி அனுப்பி வைத்ததாக புலிகளும் சொன்னதாக, காவல்துறையினரே எழுதி சான்றாவணம் உருவாக்கி விட்டனர். அதன்பின்னர் நடந்த விசாரணையில் ஈரோட்டில் சீனிவாசன் இல்லத்தில் இருந்துதான் புறப்பட்டார் என்பது அறிய வந்தவுடன் அவரது தந்தை மாரப்பனாரையும் கைது செய்ததோடு, ஈரோட்டிலும் வேறொரு புது வழக்கொன்றை புனைந்து கோவை சிறையில் அடைத்து விட்டனர் என்பதை பின்னர் அறிந்தேன்.

வாலாசாவில் அவர் அனைவரையும் உண்மையில் கைது செய்தது 4.2.1991 மாலை ஆகும். அது அனைவரின் பெயர்கள், கைப்பற்றப்பட்ட பணம், பொருள்கள், புத்தகங்கள் ஆகியன குறித்த விவரங்களுடன் 5.2.1991 நாளிட்ட அனைத்து செய்தித் தாள்களிலும் செய்தியாக வெளிவந்திருந்தது. ஆனால் புலனாய்வுப் பிரிவு தலைமையின் அறிவுறுத்தலின் பேரில், என் பெயரையும் எதிரிகள் பட்டியலில் இணைத்து 6.2.1991 மாலையில் ஆய்வு நடந்ததாகவும், ஐவர் கைது செய்யப் பட்டதாகவும் புதிதாக ஒரு முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்து கொண்டனர். ஏனெனில் 2.2.1991 அன்றே முன்காப்பு நடவடிக்கையாக சிறைப்படுத்தப்பட்ட நான் 7.2.1991 அன்றுதான் சிறையிலிருந்து விடுவிக்கப் பட்டேன் என்ற செய்தி, புலனாய்வுப் பிரிவு அறிவாளிகளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

வெறும் கைதோடு நிறுத்தவில்லை , எங்கள் இருவர் மீதும் (நான், சீனிவாசன்) பெண் புலிகள் மூவர் மீதும், உடன் பயணித்த புலித் தோழர் உதயன் மீதும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலும் கைதாணை பிறப்பிக்கப்பட்டது. நான் சேலம் சிறையில், நிகழ்வு நாளில் (உண்மையில் என்றாலும், புதிதாக பதிவு செய்யப்பட்ட 6.2.1991 ஆயினும்) சிறையில் இருந்த ஆவணங்களை ஆய்வு செய்து எங்கள் அனைவர் மீதும் போடப்பட்டிருந்த தேசிய பாதுகாப்புச் சட்டத்தை நீக்கம் செய்தது. மூன்றாண்டுகள் வழக்கு நடந்த பின்னர் நீதிமன்றம் எங்களை விடுவித்தது. எந்த அடிப்படை நயன்மை

இன்றி சில மாதங்கள் கைது செய்து வைத்திருந்த காவல்துறைக்குத்தான் தலைகுனிவாய்ப் போனது.

தோழர் சீனிவாசனும் நானும் இரண்டரை திங்களில் விடுதலை ஆனோம். காரணம் எங்களுக்காக வழக்காடியவர் கழக வழக்கறிஞர் செ. துரைசாமி. ஆனால் சீனிவாசன் தந்தை அய்யா மாரப்பனாருக்காக அவர் குடும்பத்தினர் புகழ்பெற்ற மூத்த வழக்கறிஞரை அமர்த்தியிருந்ததால், ஓராண்டு முழுமையாகக் கழித்த பின்னரே விடுதலை செய்யப்பட்டார் என்பது இன்னொரு அவலம்.

# இராஜீவ் கொலை

நாங்கள் இருவரும் விடுதலை ஆன ஒரு திங்களுக்குள்ளாகவே முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தியின் சாவு நிகழ்ந்தது.

அந்தக் கொலை நடந்த அன்று தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே உள்ள அமானி மல்லாபுரம் என்ற சிற்றூரில் திராவிடர் கழகத் தோழர்கள் சிறையிலிருந்து விடுதலையாகி இருந்த எனக்கு வரவேற்பு என்பதாக ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். அடுத்தநாள் எனக்கு வாலாசாப் பேட்டையில் வழக்கு இருந்ததால் சிறப்புரையாற்ற வந்திருந்த புலவர் கோபி. கருப்பண்ணன் உரைக்கு முன்னதாகவே, ஏற்புரையாற்றிவிட்டு எனது சீருந்தில் சேலம் புறப்பட்டு விட்டேன். நள்ளிரவு 1.45 மணிக்குப் புறப்படும் சேரன் விரைவுத் தொடர் வண்டியில் காட்பாடி சென்று வாலாசா செல்வது வழக்கம். பயணச் சீட்டு வாங்கிக் கொண்டு தொடர்வண்டிக்குக் காத்திருந்த வேளையில், காவல்துறையினர் ஒருவர் தொடர்வண்டி நிலையம் வந்து, அங்கு தொடர்வண்டி வருகைக்காக காத்திருந்த தன் குடும்பத்தினரைப் பதட்டத்தோடு அழைத்துச் சென்றனர். அவ்வாறு அங்கு வந்த எனக்கு அறிமுகமான வேறொரு காவல்துறை நண்பரை விசாரித்த போதுதான் திருப்பெரும்புதூரில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியினரின் தேர்தல் பரப்புரைக் கூட்ட மேடையில், நிகழ்வில் கலந்து கொண்டிருந்த இராஜீவ்காந்தி, வாழப்பாடி இராமமூர்த்தி ஆகியோரை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்று விட்டதாக செய்தி வந்துள்ளதாகத் தெரிவித்தார். வழக்குக்குச் செல்வதை தவிர்த்துவிட்டு நானும் என்னுடன் கூட்டத்துக்கு உடன் வந்த தோழர் கருப்பூர் சக்திவேலும் விரைவாக சேலத்திலிருந்து பத்து கல் தொலைவில் உள்ள அவரது தோட்டத்துக்குத் திரும்பினோம். ஏனெனில் புலிப்படைத் தோழர்கள் பயணத்தின் இடையிலோ அல்லது ஓரிரு நாட்கள் இடையில் தங்கவோ விரும்பினால் பெருவழிச் சாலைக்கு அருகில் அமைந்துள்ள அவரது தோட்டத்துக்கு வருவதுண்டு. அவரின் உடன்பிறப்புகள் திராவிடர் கழகத்தின் முன்னணி தோழர்கள் ஆவர். தோழர் சக்திவேல் தற்போது சேலம் கிழக்கு மாவட்டத்தின் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவராக உள்ளார்.

அது 1991 நாடாளுமன்ற, நாடாளுமன்ற தேர்தல் நேரம், அ.தி.மு.க. காங்கிரசு கூட்டணி அப்போது. தேர்தல் அலுவலகங்கள் அனைத்துக்கும் ஓரிரு மணி நேரத்துக்குள் இராஜீவ் சாவுச் செய்தி அனுப்பப்பட்டு, திட்டமிட்டு வன்முறைகள் உருவாக்கப்பட்டன. தங்கள் அரசியல் எதிரிகளைப் பழிவாங்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். தி.மு.க.வின் தேர்தல் அலுவலகங்கள், விளம்பரங்கள், பதாகைகள், கொடிக் கம்பங்கள் தாக்கப்பட்டன, தகர்க்கப்பட்டன, கொளுத்தப்பட்டன, சூறையாடப்பட்டன. ஆனாலும் திராவிடர் கழகம் வலுவாக இருந்த பகுதிகளில் மட்டும் வன்முறையாளர்கள் மீது எதிர்தாக்குதல் நடத்தப்பட்டு, விரட்டியடிக்கப்பட்டனர். கொளத்தூர், மேட்டூர், குருவரெட்டியூர் பகுதிகளில் அ.தி.மு.க. அலுவலகங்களும், விளம்பரங்களும் தாக்குதலுக்கு உள்ளாயின.

புலிகள் படையியல் பயிற்சிப் பாசறைக்குப் பொறுப்பாயிருந்தவரும் கொளத்தூர் புலியூர் பாசறையின் முதல் குழுவினர் பயிற்சிக்குத் தலைமை பயிற்சியாளராய் இருந்தவரும், கொளத்தூர் பகுதி மக்களின் பேரன்புக்கு உரியவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடுவண் குழு உறுப்பினர் தளபதி பொன்னம்மான் வீரச் சாவடைந்தார். அவரது நினைவாக கொளத்தூரை அடுத்த புலியூர் பிரிவில் நிழற்கூடம் ஒன்று 1990 செபுதம்பரில் பொதுமக்களின் துணையோடு உருவாக்கப் பட்டிருந்தது. அதை அன்றைய தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் வைகோதான் திறந்து வைத்திருந்தார் திறப்பு விழாவின் சிறப்பு விருந்தினராக கருநாடகத் தமிழர்ப் பேரவை, பெங்களூர் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் தலைவராக இருந்த அண்ணாச்சி ப. சண்முகசுந்தரம், பாவலர் அறிவுமதி ஆகியோர் கலந்து கொண்டனர். ஆள் நடமாட்டம் குறைந்த இடத்தில் அமைந்துள்ள அந்நிழற் கூடத்தின் உள்ளே பதிக்கப்பட்டிருந்த திறப்பு விழா கல்வெட்டு, இராஜீவ் சாவுக்கு நான்கு நாட்களுக்குப் பின்னர் ஓர் இரவு வேளையில் சில தமிழின இரண்டகர்களால் சேதப்படுத்தப்பட்டது. விடிந்தபின் செய்தியறிந்த சுற்றுப்புற ஊர்மக்கள் ஏறத்தாழ முன்னூறு பேர் காலை 7.00 மணியளவில் கூடி, நாங்கள் அங்குபோய் சேர்வதற்கு முன்னதாகவே, குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும் என்ற கோரிக்கையோடு சாலை மறியலைத் தொடங்கிவிட்டனர். காலை 9.00 மணிக்குள் கூடியோரின் எண்ணிக்கை இரு மடங்காகிவிட்டது. மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர், வட்டாட்சியர் என அதிகாரிகள் அனைவரும் காலை 9.30

மணியளவில் அந்த இடத்துக்கு வந்துவிட்டனர். அதற்குள்ளாக வந்த பேருந்துகள் பயணிகளை இறக்கிவிட்டுவிட்டு அந்த இடத்தோடு திரும்பி விட்டன, சரக்குந்துகள் திரும்பிப்போய் விட்டன. ஆனால் மறுபக்கம் இருந்துவந்த பேருந்துகளும், சரக்குந்துகளும் அங்கேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அதிகாரிகள் மறியலில் ஈடுபட்டிருந்தோரை அமைதிப்படுத்த எவ்வளவு முயன்றும் பயனற்றுப் போனது. குற்றவாளிகளைத் கைது செய்யாமல் மறியலைக் கைவிட முடியாது என திட்டவட்டமாகக் கூறிவிட்டனர்.

மறியல் நடக்கும் இடத்தைத் தாண்டி ஏறத்தாழ 5கல் தொலைவுக்கு அப்பால்தான் சில காங்கிரசுகாரர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் போய் உசாவ விரும்புகிறோம் என்று அதிகாரிகள் கேட்டபோதும் மக்கள் வழிவிட மறுத்து விட்டனர். அதற்குள் உளவுத் துறையினர் ஆங்காங்கே தடிகளும், வீச்சரிவாள்களும் வைக்கப்பட்டிருந்ததை அறிந்து வந்து அதிகாரிகளிடம் கூறிவிட்டிருந்தனர். வேறுவழியின்றி அருகில் இருந்த வேளாண் விளை நிலங்களில் இரு இடங்களில் இருந்த கல்சுவர்களை உடைத்து வழியேற்படுத்திக் கொண்டே அதிகாரிகளின் ஊர்திகள் சென்றன.

உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல் சாலைமறியலை கைவிடமாட்டார்கள் என்பதை நன்கறிந்து கொண்ட அதிகாரிகள் அந்தப் பகுதியைச் சேர்ந்த காங்கிரசுகாரர்களிடம் வற்புறுத்தி உள்ளனர். ஆனால் காங்கிரசு பேராளர்களோ, புலியூர் சுற்றுப்புற மக்கள் மிகுந்த கடுஞ்சினத்தோடு உள்ளனர், குற்றவாளிகள் இன்னார் என்பதை அறிந்தால் தேவையற்ற வன்முறை நிகழ்வு ஏற்படலாம், எனவே மூன்று நாட்கள் கழித்து ஏதேனும் ஒரு நீதிமன்றத்தில் அவர்களை நேர்நிற்கச் செய்துவிடுகிறோம் என்று உறுதி கூறியிருக்கிறார்கள். நண்பகல் 2.30 மணியளவில் மறியல் இடத்துக்குத் திரும்பிய வருவாய்த்துறை, காவல்துறை அதிகாரிகள் எங்களில் சிலரைத் தனியே அழைத்து சென்று உள்ள களச்சூழலை விளக்கி, காங்கிரசுக்காரர்கள் அளித்த உறுதி மொழிகளை நிறைவேற்றச் செய்வதற்கு தாங்களே பொறுப்பேற்பதாக மீண்டும் மீண்டும் சொல்லி மறியலைக் கைவிடக் கோரினர். நாங்களும் மறியலில் அமர்ந்தோரிடம் செய்திகளை விளக்கிக் கூறி மறியலை கை விட்டோம். காங்கிரசுகாரர்களும் சொன்னபடி நான்காவது நாள் இருவரை நீதிமன்றத்தில் நேர்நிற்கச் செய்தனர். பிணையில்

வந்தவர்களில் ஒருவர் ஆறுமாதம் கழித்தே தன் வீட்டுக்குத் திரும்பினார். மற்றொவருவரோ வேறு ஊருக்கே குடிபோய் விட்டார்.

இவ்வாறான கடுமையான எதிர் நடவடிக்கைகள் கொளத்தூர், மேட்டூர், குருவரெட்டியூர், கோவை, தஞ்சை முதலான பகுதிகளில் நடத்தியவர்கள் திராவிடர் கழகத்தினரும், தமிழ்நாடு திராவிடர் கழகத்தின் தோழர்கள் தாமேயன்றி தமிழ்த்தேசியம் பேசிய யாரும் இல்லை என்பதைக் கூறியாக வேண்டும்.

இராஜீவ் கொலைவழக்கில் கைது செய்யப்பட்டோர், விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டோர் பட்டியலைப் பார்த்தாலும் இதனை உணரலாம்.

## கைது விசாரணை சிறை

சென்னையில் திராவிடர் கழகக் குடும்பத்து இளைஞர்களான பேரறிவாளன், ஊத்தங்கரை வீரமணி, தென் சென்னை மாவட்ட இளைஞரணி செயலாளர் ஓ. சுந்தரம் ஆகியோரே முதலில் காவல்துறையால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள். தொடர்ந்து தமிழகம் முழுவதும் திராவிடர் கழகம், தமிழ்நாடு திராவிடர் கழகத் தோழர்களே கைது செய்யப்பட்டனர்.

கோவையில் இராஜீவ் கொலையைத் தொடர்ந்து தமிழ்நாடு திராவிடர் கழகப் பொதுச் செயலர் கோவை இராமகிருட்டிணனும், தோழர் வெ. ஆறுச்சாமியும் 'தடா' (பயங்கரவாத தடைச் சட்டம்) பிரிவுகளில் கைது செய்யப்பட்டனர். மூன்றரை ஆண்டுகள் சிறையில் இருந்து வழக்கு தள்ளுபடி ஆன பின்னரே விடுவிக்கப்பட்டனர். விடுதலை அடைந்த ஏழெட்டு மாதங்களில் கோவை வெ. ஆறுச்சாமி வேலூர் சிறப்பு முகாமில் சுரங்கம் வெட்டி விடுதலைப் புலிகள் தப்பிச் சென்ற வழக்கில் என்னோடும், ஈரோடு ப. இரத்தினசாமியோடும் சிறைப்படுத்தப்பட்டு இந்த வழக்கும் நீதிமன்றத்தில் தள்ளுபடி ஆகும் வரை எங்களோடு ஒராண்டு காலம் சிறையில் இருந்தார். மேலும், இவ்விரு திராவிடர் கழகங்களின் தோழர் ‘விசாரணை' என்ற பெயரால் கடுமையான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.

ஈழத்தில் நடந்த போர் முனைகளில் பெரிய அளவில் காயம்பட்டோர் சேலம் மருத்துவமனைகளில் வைத்துதான் அப்போது மருத்துவம் பெற்றுவந்தனர். அவ்வாறு மருத்துவம் பெற்றுவந்த விடுதலைப்புலிகளுக்கு உடன் இருந்து உதவுவதற்காக மேட்டூர் நகரத் திராவிடர் கழகத் தலைவர் முத்து, மாவட்ட இளைஞரணிச் செயலாளர் மேட்டூர் கருப்பரசன், கொளத்தூர் பகுதியைச் சேர்ந்த தாளவாடி இராசேந்திரன் ஆகியோர் அங்கிருந்தனர். இம்மூவரும் அழைத்துச் செல்லப்பட்டு 'விசாரணை' என்ற பெயரால் கொடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டார்கள். ஈரோட்டில் அப்போது முதுகலை பயின்றுவந்தவரும், பின்னர் திராவிடர் கழக மாநில மாணவரணி செயலாளராகப் பணியாற்றிய தோழர் கொளத்தூர் அ. குமார் பலமுறை வன்கொடுமைக்கு ஆளானார். இன்றைய திராவிடர் விடுதலைக் கழக சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல், அவரது உடன்பிறப்பு ஆசிரியர் கிருட்டிணமூர்த்தி (தி.க) இன்று திராவிடர் கழகத்தின்

மாவட்டத் தலைவர் சிந்தாமணியூர் சுப்பிரமணியம் ஆகியோருக்கும் அதே பெருமைகள் தான். சென்னையில் திராவிடர் கழக இளைஞரணித் தலைவர் பத்ரி, பாலகுரு , மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி மனோகரன் ஆகியோர் சிறப்புப் புலனாய்வுக் குழு இயங்கி வந்த 'மல்லிகை'க்கு பலமுறை அழைத்துச் செல்லப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டனர்.

இவை ஒருபுறம் இருக்க அப்போதைய ஈரோடு மாவட்ட திராவிடர் கழகச் செயலரும் இன்றைய திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாநில அமைப்புச் செயலருமான ஈரோடு ப. இரத்தினசாமி, கரூர் மாவட்ட தி.க. மாணவரணிச் செயலாளர் சண்முகசுந்தரம் ஆகியோரும் 'தடா' பிரிவில் சிறையில் அடைக்கப் பட்டனர். அன்றைய திராவிடர் கழகச் சட்டத்துறை செயலாளரும் தற்போதைய தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் துணைத் தலைவருமான மூத்த வழக்குரைஞர் செ. துரைசாமி அவ்விரு தோழர்களையும் ஒரு திங்கள் காலத்தில் பிணையில் விடுவிக்க வைத்தார். 'தடா' சட்டத்தில் கைதாகி தமிழ்நாட்டு அளவில் முதலில் பிணை பெற்றவர்களும், இந்திய ஒன்றிய அளவில் ஒரு திங்கள் கால அளவுக்குள் பிணை பெற்றவகளும் இவர்கள் இருவருமே ஆவர்.

இராஜீவ் கொலை நடந்த சில திங்களில், விடுதலைப் புலிகளுக்கு உதவியதாக தற்போது திராவிடர் கழகத்தின் சட்டத் துறை செயலாளராக உள்ள வழக்குரைஞர் த. வீரசேகரனையும் 'தடா' வழக்கில் சிறைப்படுத்தியது சிறப்புப் புலனாய்வுக் குழு . அவருக்காக கழக வழக்குரைஞர் செ. துரைசாமியும், சட்டமன்ற பேரவை துணைத் தலைவராகவும் இருந்தவரும் அப்போது மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டத்துறை செயலாளராகவும் விளங்கிய மூத்த வழக்குரைஞர் ந. கணபதியும் வழக்காடி பிணையில் வெளிக் கொணர்ந்தனர்.

திருமணம் நடந்தேறிய ஐந்தாவது நாள் சேலம் கோ. தீர்த்தாரப்பனை விசாரணைக்காய் 'மல்லிகை'க்கு அழைத்து சென்றனர் சிறப்புப் புலனாய்வுக் குழுவினர். அதேநாள் என்னையும் அழைத்திருந்தார்கள். விசாரணை நடந்தது. விசாரணை என்றாலே அடி உதை தானே! இருவரையும் வெவ்வேறு அறையில் வைத்துதான் விசாரணையில். நான்

இல்லை என்றதை தீர்த்தாரப்பன் ஆம் என்று சொன்னால் எனக்கு அடிவிழும். தீர்த்தாரப்பன் இல்லை என்றதை நான் ஆம் என்றால் அவருக்குக் கிடைக்கும்.

இவை ஒரு புறமிருக்க, மறுபுறம் விடுதலைப் புலிகளுடன் பழகி, உரையாட நம் நாட்டு இளைஞர்களுக்கும் தமிழ்நாட்டு விடுதலை மீதான தீவிர உணர்வும், ஆயுதப் போராட்டம் நடத்த வேண்டிய தேவை வந்தால் நடத்துவோம் என்ற உறுதியும் வளரலாயிற்று.

இந்திய ஒன்றிய அமைதிப்படை, ஈழ மண்ணில் நிகழ்த்திய வெறியாட்டங்களும், ஈழ விடுதலையை பல ஆண்டுகள் பின்தள்ளி விட்டார்களே என்ற சினமும், தமிழின இளையோர் நடுவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. படையில் பயிற்சி எடுக்க ஈழம் செல்லத் தொடங்கினர். 1991ஆம் ஆண்டு இராஜீவ் கொலைக்குப் பின்னர் தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு உதவிகள் செய்வதில் பெரும் பங்காற்றினர்.

1992இல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) தலைவர் பத்மநாபா கொலை வழக்கில் இருபதுக்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர். அதில் தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி அவர்களும், அவரது கணவர் ஜகதீசனும் அடக்கம்.

அவர்களில் ஒருசிலரைத் தவிர, அனைவரும் ஈழம் சென்று படையியல் பயிற்சி பெற்று வந்தவர்களே ஆவர். குற்றஞ்சாட்டப்பட்டவரில் மாணிக்கம் என்ற கடலோடியைத் தவிர, மற்றவர்கள் திராவிடர் கழகம், தமிழ்நாடு திராவிடர் கழகம் ஆகிய அமைப்பினரே ஆவர்.

மேலும், இராஜீவ் வழக்கிலாகட்டும், பத்மநாபா வழக்கிலாகட்டும், அல்லது ஈழம் விடுதலைப் புலிகள் வழக்குகளில் உதவி புரிந்தோர் என சிறைப்படுத்தப் பட்டோர் அனைவரும் இவ்விரு கழகங்களைச் சார்ந்தவரே ஆவர். நேரடியாக, திராவிடர் கழகங்களின் உறுப்பினராக இல்லாதிருந்தோரும், பெரியாரிய குடும்பங்களின் உறுப்பினர்களாகவே இருந்துள்ளனர்.

1994ஆம் ஆண்டு மே மாதத்தில் தஞ்சை மாவட்டம், அம்மாபேட்டையில் என்னுடைய மகிழுந்து புலிகள் இயக்கத் தோழர்களுடன் பிடிபட்டது. அந்த மகிழுந்தில் புலிகளுடன் பயணித்தவர்கள் பூந்தோட்டம் திராவிடர்க் கழகத் தோழர் சி.சா.இராசனும், திருவாருர் தி.க. இளைஞரணிச் செயலாளர் ஆட்டோ இரவியுமே ஆவர். தொடர் விசாரணையில் தோழர் இராசனின் தந்தையும், திராவிடர்க் கழக முன்னணித் தோழரும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான சாரங்பாணியும், அவரது தங்கை கவிதாவும், (ஒரே குடும்பத்தில் மூன்று பேர்), திருவாரூர் திராவிடர் கழகத் தோழர் தியாகுவும் கைது செய்யப்பட்டனர். என்னையும், சேலம் மாவட்ட தி.வி.க. தலைவர் சக்திவேலும், தஞ்சை மாவட்டத் தி.க. தலைவர் இரயபுரம் கோபாலும் கைது செய்யப்பபட்டு, ‘தடா’ பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்தனர். வழக்கிலிருந்து ஏழு மாதங்களில் பிணையில் வெளிவந்திருந்தாலும், 25 ஆண்டுகளைக் கடந்தும் இன்றும் வழக்கு திருச்சி தடா நீதிமன்றத்தில் நடந்துவருகிறது.

1995ஆம் ஆண்டு ஆகத்து 15ஆம் நாள் வேலூர் சிறப்பு முகாமில் இருந்து, 152 அடிகள் தூரம் சுரங்கம் வெட்டி, 43 விடுதலைப் புலிகள் தப்பிச் சென்றுவிட்டனர். அவர்களிடம் இருந்து பிடிபட்ட ஆவணங்களில் எனக்கும், இப்போதைய திராவிடர் விடுதலைக் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ப. இரத்தினசாமிக்கும் அடிக்கடி தொலை பேசியுள்ளதை அறிந்தனர். ’தடா’ வழக்கிலிருந்து 1995ஆம் ஆண்டு சனவரி மாதம் பிணையில் வந்திருந்த என்னையும், தோழர் இரத்தினசாமியையும் செப்டம்பர் மாதம் மீண்டும் கைது செய்தனர். தொடர் விசாரணையில் தப்பிய விடுதலைப் புலி ஒருவர் பிடிபட்டதைத் தொடர்ந்து, அவருக்கு அடைக்கலம் கொடுத்ததற்காக, மூன்றரை ஆண்டு தடா சிறைவாசம் முடிந்து கடந்த ஆண்டு விடுதலை ஆகியிருந்த தந்தை பெரியார் திராவிடர்க் கழக அமைப்புச் செயலாளர் கோவை வெ.ஆறுச்சாமியும் கைதாகி சிறைக்கு வந்தார். ஓராண்டு காலம் கடந்தும் எங்களுக்குப் பிணையே வழங்கப்படவில்லை. வேறு வழியின்றி வழக்கையே நடத்தினோம். குற்றம் நிரூபிக்கப் படாததால் ஓராண்டு சிறைவாசத்துக்குப் பின்னர் வழக்குத் தள்ளுபடி ஆனபின்னரே நாங்கள் விடுதலை ஆனோம்.

2002இல் தலைவர் பிரபாகரனின் செய்தியாளர் சந்திப்பு குறித்து பேசியதற்காக கைதாகி ஒன்றரை ஆண்டுகள் பொடா சட்டத்தில் சிறைப்பட்டிருந்த சுப.வீ., மருத்துவர் தாயப்பன் ஆகியோரும் பெரியாரியர்களே.

2002இல்திருமங்கலம் கூட்டத்தில் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக பொடா சட்டத்தில் கைதாகி ஒன்றரை ஆண்டுகள் சிறைப்பட்டிருந்த ம.தி.மு.க தலைவர் வை.கோ., பரப்புரைச் செயலர் வழக்குரைஞர் அழகு சுந்தரம், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் சுப்பிரமணியம் உள்ளிட்டோரும் திராவிட இயக்கத்தவர் இல்லையா?

இவை மட்டுமில்லை, 2009ஆம் ஆண்டு ஈழத்தின் இறுதிப்போர் நிகழ்வுவரை தடா, பொடா, தேசியப் பாதுகாப்பு சட்டங்களின்படி தடுப்புக் காவலில் சிறைப்படுத்தப்பட்டோர் பட்டியலைப் பார்த்தாலும் அய்யா பழ. நெடுமாறன், புதுக்கோட்டை பாவணன் (இவரும் முன்னாள் தி.மு.க., ம.தி.மு.க.வினர்தான்) இருவரைத் தவிர மற்றவர்கள் திராவிடர் - திராவிட இயக்கத்தினரே ஆவர்.

**நான் இதுவரை எழுதியுள்ளவை, அனைத்தும் வெளியில் சொல்லத் தக்கவை மட்டுமே, நானறிந்தவற்றில் நினைவில் இருந்தவை மட்டுமே. தோழர்கள் கோவை இராமகிருட்டிணன், கோவை ஆறுமுகச்சாமி ஆகியோர் இவைபோன்ற இன்னும் ஏராளம் செய்திகளைத் தரமுடியும்**. சென்னை பாலகுருவும், கொளத்தூர் பாலனும், திண்டுக்கல், புதுக்கோட்டை, மதுரை, வத்திராயிருப்பு, தோழர்களும் இன்று நம்மிடையே இல்லாமல் போய்விட்ட சென்னை பத்ரி, மேட்டூர் கருப்பரசன், மேட்டூர் முத்து, கொளத்தூர் இராசேந்திரன், ஏ.ஜி.கே, குஞ்சுபாபு , ஜோசப், அறந்தாங்கி முருகேசன் முதலானோர் பங்களிப்பும் குறைவானதல்ல.

# புதிய தமிழ்த்தேசியர்களுக்கு சவால்

வரலாற்றை எழுதுபவர்கள், நிகழ்வுகளின் காலத்தைக் குறிப்பிட இயேசு கிறித்துவின் பிறப்பை வைத்து பிறப்புக்கு முன், பின் என்பதாக கி.மு, கி.பி எனக் குறிப்பிடுவதுண்டு. நாம் தமிழ்நாட்டின் ஈழ ஆதரவு வரலாற்றைக் கணக்கிட முள்ளிவாய்க்காலுக்கு முன், பின் என கணக்கிட்டு மு.மு., மு.பி என்று பிரிக்கலாம்.

மு.பி. காலகட்டத்தில் ஈழவிடுதலை, விடுதலைப் புலிகள், பிரபாகரன் ஈழத் தமிழர் உரிமை என பொதுவெளியில் காட்டுக் கூச்சலும், இணைய வெளியில் வெறி ஓலமும் எழுப்புகிற புதிய 'தமிழ்க் கேடர்கள்' - ஈழ விடுதலைக்கு திராவிடம் இரண்டகம் மட்டுமே இழைத்து விட்டது என்று பிதற்றித் திரியும் குறை குடங்கள் - இவர்களில் எவரேனும் மு.மு., காலக் கட்டத்தில் ஈழ விடுதலைக்கு ஆற்றிய பங்களிப்பைப் பதிவிடுவார்களா? பதிவிட முடியுமா? 1980களின் தொடக்கத்திலிருந்து இன்றுவரை ஈழ ஆதரவு செயல்பாடுகளுக்கோ (மு.பி. 'புதிய தமிழ்த் தேசியர்கள் ஈழத்தை வைத்து பிழைப்பு நடத்தினர். துரோகம் செய்தனர் - வந்தேறிகள் என்று இழித்துரைக்கும் 'திராவிடர்கள்' எவரேனும்) ஈழத் தமிழ் மக்கள் எவரிடமிருந்தாவது சிறுபொருள் உதவியோ, நன்கொடையோ பெற்றதாகக் கூற முடியுமா?